பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 சித்திரை 18 ஜு/ லை/ 22 இதழ் 79

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 1-5-78

பளிச்சிடும் வெண்மைக்கு.
லாலா நீலசோப்,
லாலா பார் சோப்,
சன்சயின் சோப்.
தயாரிப்பாளர்:
லாலா
தொழிற்சாலை
அச்சுவேலி

# "எந்தவொரு நாடும் தொழிலாளர் சக்தியின்றி விடுதலை பெற்றதில்லை"

## கொழும்பில் மேதினம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் மேதினக்கூட்டம் இன்று காலிமுக மைதானத்தில் நடைபெறுகிறது.

பிரதமர், ஜனாதிபதி உட்பட பல ஐக்கியதேசியக்கட்சித்தலைவர்களும், தொழிற்சங்கப்பிரதிநிதிகளும் இக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துவர்.

கூட்டத்தில் இந்திய, உள்ளூர் கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகளும், ஆயுதப்படையினரின் பாண்ட் வாத்திய இசை நிகழ்ச்சி ஆகியனவும் நடைபெறும்.

### சுதந்திரக்கட்சி

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மேதினக்கூட்டம் கொழும்பு ஹவ்லக் பூங்காவில் நடைபெறுகிறது.

பகல் 1 மணிக்கு நகரசபை மண்டபத்திலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் ஹவ்லக்பூங்காவைச் சென்றடையும்.

மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சிகளின் மேதினக்கூட்டம் கொழும்பு ஹைட்பார்க்கில் நடைபெறுகிறது. ஊர்வலம் கம்பல்பார்க்கில் ஆரம்பமாகிறது.

### ஹட்டனில் இ.தொ.கா

ஹட்டன் டன்பார் மைதானத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மேதினக்கூட்டம் நடைபெறுகிறது. ஊர்வலமும் இடம்பெறும். [இ]

## எதிர்க்கட்சித் தலைவர் 'அமிர்' விடுத்துள்ள மேதினச்செய்தி

[யாழ்ப்பாணம்]

தொழிலாளர் சக்தியின்றி எந்தவொரு நாடும் விடுதலை பெற்றதாக வரலாறு கிடையாது. தொழிலாளர் ஒற்றுமையும், ஒத்துழைப்பும் நாம்காணவிரும்பும் சமதர்ம, தமிழீழத்தை [illegible] அத்தியாவசியமானது. ஒரு நாட்டின் மூதன்மையான தேசியச் செல்வம் அந்த நாட்டுத்தொழிலாளர்களே. அவர்கள் உழைப்பின்றி எதுவுமே உருவாக முடியாது.



இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள மேதினச் செய்தியில் கூறியுள்ளார்.

அவர் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தமிழ் பேசும் தொழிலாளர்கள் இவ்வருடம் மேதினத்தை மிகப்பெரியஅளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையில் பல்வேறு இயக்கங்களுடனும், தொழிற்சங்கங்களுடனும் கூட்டாக இணைந்து கொண்டாடுகிறார்கள். இந்த ஒற்றுமை தமிழினத்தின் விடுதலைநாள் வெகுதொலைவில் இல்லை என்பதை உணர்த்துகின்றது.

தமிழ்ஈழத்தை வென்றெடுப்பதற்கு தொழிலாளர்கள் ஆனைவரும் தங்கள் பங்கை உரிய முறையில் செலுத்தியே ஆகவேண்டும். தமிழ் தொழிலாளர்கள் தங்களது உரிமைகளைப் பெறுவதற்காக ஒற்றுமைப்பட்டு போராடுகின்ற அதே நேரத்தில் தங்கள் இனத்தின்

[8ம் பக்கம் பார்க்க]

## "தமிழின சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க முற்போக்குச் சக்திகள் திரள வேண்டும்"

இலங்கைவாழ் தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயக உரிமையான சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்துத் [illegible] தனது [illegible] நிலைநாட்டும் ஒரு உரிமையையும் அங்கீகரிப்பதன் மூலம் பாஸிஷ சக்திகளுக்கு எதிராக நாட்டிலுள்ள சகலமுற்போக்கு ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரளவேண்டும்.

இவ்வாறு தமிழ் தொழிலாளர் மேதின அமைப்புக் குழுத் தலைவர் திரு. எம். ஆனைசுந்தரம் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் அதியுன்னத நாளாகிய மே தன்னுலில் பாட்டாளி வர்க்கம் ஐக்கியத்தையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்க முனையும் நன்னாளில் தமிழின விடுதலைக்கு உழைக்கும் மக்களும் தமது பங்கைச் செலுத்த முன்வரவேண்டும்.

தமிழ்ஈழ விடுதலைக்கும் வர்க்கபேதமற்றசமுதாயத்தை உருவாக்குப் பணியிலும் தமிழ் மக்களிடையே நீண்டகாலமாக

(8 ம் பக்கம் பார்க்க)

## முற்றவெளியில் ஐக்கிய மேதின விழா

(யாழ்ப்பாணம்)

லங்காதொழிற்சங்கங்களின் சம்மேளனம், இலங்கை தொழிற்சங்க சம்மேளனம், அரசாங்கலிகிதர் சேவைச் சங்கம், தொழில் நுட்ப ஊழியர் சங்க சம்மேளனம், இலங்கை வர்த்தக ஊழியர்சங்கம், அரசாங்கபொதுச்சேவைதொழிற்சங்க சம்மேளனம், இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகியவை ஒன்றிணைந்து கொண்டாடும் ஐக்கிய மேதினவிழா யாழ். முற்றவெளி மைதானத்தில் இன்று பிற்பகல் 5-00மணிக்கு திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறுகிறது.

ஊர்வலம் பிற்பகல் 3-30 மணிக்கு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் ஆரம்ப

(8-ம் பக்கம் பார்க்க)

## பெண்கள் பெருமளவில் கலந்து கொள்வர்

[யாழ்ப்பாணம்]

இன்று மாலை நடைபெறவிருக்கும், தமிழ் தொழிலாளர் மேதினவிழாவில் அங்கம் வகிக்கும் தமிழ் தொழிற்சங்கங்களிலிருந்து பெருமளவு பெண்கள் ஊர்வலத்தில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. மட்டக்களப்பு கொழும்பு, திருமலை, வனியா ஆகிய பகுதிகளிலிருந்து மேதினத்தில் கலந்து கொள்வதற்காக நூற்றுக்கணக்கான பெண் தொழிலாளிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

தமிழ் ஈழம் எங்கள் தாரக மந்திரம், சிங்கள ஏகாதிபத்தியத்தின் சுரண்டலை ஒழிப்போம். தொழிலாளர் உரிமையை பறிக்காதே வெள்ளை அறிக்கையை வாபஸ்பெறுக, தாரமிஷ்ட ஆட்சியிலும் சிங்களத் தலைமையா, அந்நிய சுரண்டல் வலயம் தாயகமிலையா, கூட்டுறவு பணியாளர் சபையை அகற்று, ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கோரிக்கையை விடு, தனிச்சிங்களக் கடிதங்களை நிராகரிப்போம், மிளகாய் வெங்காயம், மீன், கருவாடு இறக்குமதியை தடைசெய்க, தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை வழங்குக போன்ற பல கோஷங்கள் ஊர்வலத்தில் கோஷிப்பதற்காக தமிழ் தொழிற்சங்க கூட்டணி செயற்கமிட்டியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஊர்வலத்தை சிறப்பாக நடத்த ஒத்துழைப்பு நல்குமாறு சகல தொழிற்சங்க உறுப்பினர்களையும் விடுதலை இயக்க தொண்டர்களையும், தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டிச் செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் கேட்டுள்ளார். [செ]

## "சுயநிர்ணய உரிமைக் கோஷத்தைமுன்வைப்போம் மேதினச்செய்தியில் வி. பி.

[யாழ்ப்பாணம்]

"இலங்கையில் உள்ள தேசிய இனங்கள் நிபந்தனையற்ற சுயநிர்ணய உரிமையை பெற வேண்டும். அவசியமானால் இந்த் தேசிய இனங்கள் பிரிந்து சென்று தனி ராஜ்ஜியம் அமைக்கும் உரிமையையும் பெற்றிருத்தல் வேண்டும்.

இவ்வாறு செந்தமிழர் இயக்க அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம் மேதினத்தை யொட்டி வெளியிட்டுள்ள செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

திரு. வி பி, மேலும் கூறியிருப்பதாவது:-

### உத்வேகம்

விடுதலைக்காகப் போராடும் அடிமை நாடுகள் தமது விடுதலை வேட்கையின் உத்வேகத்தை உலகறிய செய்ய இந்நன்நாளை பயன் படுத்தி வருகின்றன. விடுதலைபெற்ற 3ம் முகாம் நாடுகளும் இலங்கையில் தேசிய விழாவாக மேதினம்



அங்கீகரிக்கப் பட்டுள்ளது. பாட்டாளிவர்க்கசர்வதேசஐக்கியத்தையும் ஒருமைப்பாட்

(8-ம் பக்கம் பார்க்க)

## முருங்கனில் கொலையுண்ட சி. ஐ. டி. பொலிசார் பாவித்த 'பேஜோ 404' கார் கொழும்பு செல்கிறது

[கொழும்பு]

மூறிகண்டி காட்டுக்குள் முற்றாக எரிந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்ட முருங்கனில் கொலையுண்ட தும்பறியும் பொலிசார்பாவித்த 'பேஜோ-404' காரை கொழும்புக்கு எடுத்து வருவதற்கான ஏற்பாடுகளைப் பொலிசார் செய்துள்ளனர்.

இப்படுகொலை தொடர்பாக மேலும் விசாரணைகளை மேற்கொள்வதற்காகவே இக்கார் கொழும்புக்கு எடுத்துவரப் படுகிறது.

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

தெசவு வேலைக்கு அனுபவமுள்ள பெண்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரிலோ, கடிதமூலமோ தொடர்பு கொள்ளவும். தங்குமிட வசதியுண்டு பேபி கைத்தறி நிலையம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 9173

பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் ஜனதா ஸ்பெஷல் பீடி சுற்றுவதில் அனுபவம் உள்ள பெண் தொழிலாளர் தேவை. கூலி 1000 பீடிக்கு ரூபா 7-50. மேலும் ஜனதா ஸ்பெஷல் பீடி தயாரிக்க பெண் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கப்படும். ஜனதா ஸ்பெஷல் பீடி சுற்ற விரும்புவோரும் பீடி சுற்றப் பழக விரும்புவோரும் உடன் விண்ணப்பிக்கவும். அல்லது நேரில் வரவும். பவானி பீடித் தொழிற்சாலை, சந்திரபவனம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை. 9135

அச்சுக்கூடத்தில் வேலைகள் பழக விரும்பும் 15 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் தேவை ஆர். எஸ் அச்சகம், 149. கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம். 9183

வைதுபத்தி தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. தொழிற்சாலைக்குச் சமீபமாக உள்ளவர்கள் விரும்பப்படுவர். ராதா வாசனைத் தொழிற்சாலை, 34, ஆடியபாத ரோட்டு, நல்லூர், யாழ்ப்பாணம் 9169

## விற்பனைக்கு

இரு அவுட்டர் மோட்டர்கள் விற்பனைக்குண்டு. ஒன்று 6 கோவிபவர், மற்றது 10 கோவிபவர். தொடர்பு: ஆ. ஆனந்தி, கென்னடி வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். 9176

''வைத்தியர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் உகந்த சுத்தமான நல்லெண்ணெய் தொகையாகவும், சில்லறையாகவும் எம்மிடம் கிடைக்கும். தொடர்பு கொள்ளவும்' ராதா ஒயில் மில்ஸ், 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9182

யாழ். நகரில் பிரசித்தி பெற்ற புடவை வியாபார நிறுவனத்திற்கு புடவை, அழகு சாதனங்கள் விற்பனை செய்வதற்கு ஆண், பெண் விற்பனையாளர்கள் தேவை. விரும்புவோர் 5-05-78 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9194, மே/பா. ஈழநாடு யாழ்ப்பாணம். 9194

ம வஸ்தியாம்பிள்ளை புத்தகசாலை 'இஜஸ்ரேற்றர்' பிரதி எடுக்கும் ஸ்ரென்சில், துளையிடும் கருவி, 'றீவ்ஸ்' இந்தியன் மை, லயன் பிராண்ட் 'ஸ்ரேப்லர்', ஸ்ரேப்லர் ஊசிகள், கடித உறிப்வகைகள், 'பான்ஸி' 'Bic' போல் பொயின்ட் பேனைகள், செய்முறை அப்பியாசக்கொப்பிகள், அப்பியாசக் கொப்பிகள், கட்டச்சு கடதாசிகள், ஆகியவை மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். 390, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 695 9157

வீட்டுப்பாவனையில் இருக்கும் 2 இஞ்சி வூல்சிலி (ஒறிஜினல் மொடல் லுகாஸ் மக்னெற்) நீர் இறைக்கும் யந்திரமும் (பம்), 60 அடி 2 இஞ்சி இரும்புப் பைப்பும் விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் நா. சிவக்கொழுந்து, ''திருமகால்'' கரணவாய் வடக்கு, கல்வெட்டித்துறை (உடுப்பிட்டிக் கிராமசபைக்கு அருமையில்) என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம். 9190

## தேவை

முதல் தரமான பெயின்டர் தேவை. நேரில் வரவும். ஆர். எஸ் அச்சகம், யாழ்ப்பாணம். 9184

**I C. M. A.**

Foundation - Section A
Financial Accounting FAI
May 75 to Nov 77 &
Pilot paper
Seven Question papers
and suggested answers
by
A Somasundarampillai
B. A F. C A.
Rs 25/-
Chartered Accountant
91¼ (95) Stanley Road,
Jaffna
Percival Hall,
9172 Jaffna.

**Percival Hall**
**Chapel Street, Jaffna.**

I.C.M.A. Foundation A
Applications
Close 8-5-78
Enrolment on 12 5-78
Classes
Commence 15-5-78
I C.M.A. Foundation B
Professional I
Applications 31-5-78
Entrolment on 2-6-78
Classes
Commence 5-6-78
9171

## பொன்னாடையும் பொற்கிழியும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை நாச்சிமார்கோவில் மகோற்சவகாலத்தில் தினமும் ராமாயண விரிவுரை நிகழ்த்திய பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவுக்கு திருப்பணி சபைத்தலைவர் திரு. கந்தசாமியினால் பொன்னாடைபோர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன் பொற்கிழியும் வழங்கப்பட்டது. (உ)

## தசாக அறிவிப்பு

நல்லூர் ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் பிரதம குரு சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள் அவர்களின் தசாக கிரியைகள் கீழ்க்காணும் திகதிகளில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

தசாகம்: 2-5-78 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு
ஏகோதிஷ்டம்: 3-5-78 புதன்கிழமை
சபிண்டீகரணம்: 4-5-78 வியாழக்கிழமை
கிருஹயக்ஞம்: 5-5-78 வெள்ளிக்கிழமை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

குடும்பத்தினர்.
9195



அளவெட்டியைச் சேர்ந்த வி. கெஞானசேகரம் தமிழ்நாடு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரியிடம் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனின் தங்கப் பதக்கத்தையும், சங்கீத பூஷணம் பட்டத்தையும் பெற்றுக்கொள்கையில் எடுக்கப்பட்ட படம் இது. படத்தின் மத்தியில் காணப்படுவர். ''மருதமலை மாமணியே'' என்ற முருகன் பாடல் மூலம் புகழ்பெற்றவரும் அண்ணாமலை பல்கலைக்கழக இசைப்பேராசிரியருமான மதுரை சோமசுந்தரம் ஆவார். திரு. சந்திரசேகரம் யாழ் ரசிகரஞ்சனசபை நடத்தும் இசைக்கல்லூரியில் இசைப் பேராசிரியராகப் பணி புரிகிறார். இவரது பண்ணிசைக்கச்சேரிகளை திருமுருக கிருபானந்தவாரியார், காஞ்சிகாமகோடி சுவாமிகள் முதலானோர் பாராட்டியுள்ளனர். இவர் இலங்கை விவேகானந்த சபையினரின் புலமைப் பரிசில் பெற்று தென்னகத்தில் திருப்பனந்தாள் ஆதீனத்தில் பயிற்சி பெற்று ஆதீன முதல்வரால் ''பண்ணிசைவாணர்'' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவருமாவார்.

## கண்டியில் சன்சோனி கமிஷன்!

(கண்டி)

கண்டியில் சன்சோனி கமிஷனர் விசாரணை சுமார் ஒரு மாதகாலம் நடைபெறும்.

திரு. எம். ஸி. சன்சோனி முன்னிலையில் கண்டியில் விசாரணை இம்மாதம் 15ம் தேதி ஆரம்பமாகும்.

நூற்றுக்கு மேற்பட்டவர்கள் சாட்சியமளிக்க விருக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் தோட்டத் தமிழ்த் தொழிலாளிகளாவர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான், திரு. எஸ். செல்லச்சாமி ஆகியோரும் சாட்சியமளிப்பார்கள் என்று தெரியவருகிறது.

## கேள்வி அறிவித்தல் கொக்குவில் கிராமசபை

கொக்குவில் கிராமசபை விசேட ஆணையாளரால் 1978ம் ஆண்டு மே மாதம் 17ந் திகதி காலை 10-00 மணி வரையும் கீழ்க்காட்டப்படும் வேலைகளுக்கான சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். ரூபா 50/- வைப்புப் பணமாகவும், ரூபா 25/- பத்திரப் பணமாகவும் (மீளளிக்கப்படாதது) செலுத்துவதன் பேரில் 15 05 78 மாலை 3 மணி வரையும் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரத்தில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல்வேண்டும் மேலதிக விபரங்களை கிராம சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### வேலை விபரம்

[1] பொற்பதி வீதி - குளங்கரை வீதி.
[2] சிவகாமி அம்மன் கோவில் வீதி.
[3] மஞ்சவனப்பதி வீதி.
[4] மூத்தநட்டி ஒழுங்கை

ந அமுதசாகரன்
விசேட ஆணையாளர்,
கொக்குவில் கிராமசபை.
கிராமசபை அலுவலகம்,
கொக்குவில்.
28-04-78 9193

## வாரந்தக் கருத்தரங்கு நடத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

வாரந்தோறும் கருத்தரங்குகளை நடத்துவது என்றும் கிராமத்தின் சகல பாகங்களிலும் இயக்க அங்கத்தவர்களைச் சேர்ப்பது என்றும் செந்தமிழர் இயக்கத்தின் ஏழாலைக் கிளை தீர்மானித்துள்ளது.

இதுபற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்று கிளைப் பொருளாளர் திரு. இரத்தினம் லஷ்மிகாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அவர் பேசுகையில், ''எமது இயக்கம் தனித்துவம் வாய்ந்தது. எமக்கென்று ஒரு கொள்கை உண்டு. அக்கொள்கைவழி நின்று தமிழின விடுதலை காண்போம். அந்த நம்பிக்கை நெஞ்சுரம் நமக்குண்டு.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு நாம் நேசக்கரம் நீட்டுகிறோம். உரிமைப் போரில் எமது பங்கு எந்தளவு தூய்மைவாய்ந்தது என்பதை தமிழ் மக்கள் தெளிவாக அறியத்தான் போகிறார்கள். எமது இயக்கத்தில் நாளாந்தம் சேரும் துடிப்புள்ள இளைஞர்களின் எழுச்சி எமக்கு தெம்பு தருகிறது'' என்றார்.

திரு. இ. ஆலாலசுந்தரம் உட்பட மற்றும் சிலரும் பேசினர். (உ)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு
1. கணபதிப்பிள்ளை சபாரத்தினமும்
2. பெண் இராசபூபதியும்,
அராலி தெற்கு, அராலி.

வாதிகள்

இல ஈடு/1106

எதிராக

கயிலாயர் பொன்னையா, அராலி தெற்கு, அராலி
பிரதிவாதி

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் ஈடு/1106-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும் ஆதனம் 1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 19-ந் திகதி (19-5 78) வெள்ளிக்கிழமை காலை 9-30 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதலும் வட்டியுமாக 7,350/- மேலும் 5000/- ரூபாவிற்கு வருடமொன்றுக்கு 20/51976—4. 11. 1976 வரைக்கும் பத்து வீத வட்டியும் அதற்குமேல் 4. 11. 1976ம் திகதி தொடக்கம் முழுப் பணம் இறுக்கும்வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 610/59 சதமும் [நடைபெற்ற செலவு 351/60, நடைபெறவேண்டிய செலவு 148/57 சமயாசமயச் செலவு 110/42] இதில் தீர்வைத் தொகையில் கட்டிய 2000/- ரூபாவும் செலவால் கட்டிய 175/- ரூபாவும் போக மிகுதி.

### ஆதனடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி, வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று, அராலி மேற்கும் தெற்கும் இறை ''எருவியன்புலம்'' பர. (நில. லா. 20) இருபது கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் இதனெல்லைகள் கிழக்கு ஒழுங்கையும் நாகதம்பிரான் கோவிலுக்குரியவாதனமும், வடக்கு நாகதம்பிரான் கோவிலுக்குரியவாதனம், மேற்கு நாகதம்பிரான் கோயிலுக்கும், அம்பலவாணர் விரவாகுவுக்கும் கதிரவேலு அம்பாத்துரையின் உரிமைக்காரருக்கும், கயிலாயர் பொன்னையாவிற்கும் பெண் தங்கரத்தினத்திற்கும் உரிய ஆதனங்கள், தெற்கு அம்பலவாணர் தம்பிப்பிள்ளையின் உரிமைக்காரனின் ஆதனம். இவ்வெல்லைகள்படி இதடங்கலும்.

தா. க. பொன்னுத்துரை ஜே பீ,
கொமிஷனரும் விலைமதிப்பாளருமே

''அகிலகம்'',
28/1, யாழ் வீதி,
யாழ்ப்பாணம். 9188

# மேதினம்

இன்று மேதினம். உலகத் தொழிலாளர்களின் ஒருமைப்பாட்டுத் தினம் என்றும் தியாகத்திருநாள் என்றும் இன்றைய தினத்தை அழைப்பார்கள்.

1886ம் ஆண்டு மேமாதம் முதல் தேதி அமெரிக்காவிலுள்ள சிக்காகோ நகர வீதிகளில் எட்டுமணி நேர வேலைகோரித் தொழிலாளர் ஊர்வலம் நடத்தினர். இவர்களின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதில் பலியான தொழிலாளரின் இரத்தம் சிக்காகோ நகரவீதிகளில் ஆறாகப் பெருகி ஓடியது ஆனால் தொழிலாளரின் ஒற்றுமை அவர்களுக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்தது.

அன்றுமுதல் உலகத் தொழிலாளர்கள், இத்தினத்தை தொழிலாளரின் ஒருமைப்பாட்டுத் தினமாகவும் தியாகத் தினமாகவும் கொண்டாடி வருகின்றனர்.

நமது நாட்டில் இருபது வருடங்களுக்கு முன்னர் மேதினம் விடுமுறை நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

இலங்கையில் தொழிலாள வர்க்கம் பல உரிமைகளையும் சலுகைகளையும் பெற்றுள்ள தென்பது உண்மையே.

தொழிலாளர்கள் பலகட்சிகளாகவும் பல தொழிற் சங்கங்களாகவும் பிரிந்திருப்பினும் உரிமைக்கான போராட்டத்தில் அவர்கள் ஒன்றுபடும் பண்புள்ளவர்கள்.

ஆனாலும் பலபல அரசியல் கட்சிகளாகவும் பல தொழிற் சங்கங்களாகவும் சிதறிக்கிடக்காமல் ஐக்கியப்பட்டிருப்பார்களானால் இன்னும் பல உரிமைகளைப்பெற்றிருக்கமுடியும்.

போட்டித் தொழிற் சங்கங்களும் அரசியல் கட்சிப் போட்டிகளும் கடந்த காலங்களில் தொழிலாளர்களுக் கிடையில் மோதலை ஏற்படுத்தி தொழிலாளர் மத்தியில் பிளவை உண்டாக்கியது.

மேதினமென்றால் அடிதடி கல்வீச்சு என்று கவலைப்படும் அளவுக்கு நமது நாட்டில் அது பெயர்பெற்றது. சென்றவருடம் மேதினத்தில் பெருந்தொகையான பஸ்கள் சேதமடைந்தன.

மேதினத்தின் உண்மையான தத்துவத்தைப் புரிந்துகொண்டு தலைவர்கள் ஒற்றுமைப்படாவிட்டாலும் தொழிலாளர்கள் ஒன்றுபட்டுத் தங்கள் ஐக்கியத்தை நிலைநாட்டுவார்களென்று எதிர்பார்ப்போம்.

பாட்டாளிகள் மட்டுமல்லாது அமைதியையும் நீதி நியாயத்தையும் விரும்பும் அனைவரும் அமைதியான மகிழ்ச்சியான ஒற்றுமைப்பட்ட மேதினவிழாவை வரவேற்பார்கள்; அவர்களும் உற்சாகத்துடன் கலந்துகொள்வர்.

இன்றைய மேதினம் தொழிலாளரின் ஒன்றுபட்ட சக்தியை எடுத்துக் காட்டுவதாக அமையட்டும்.



புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவிலுக்குப் புதிதாக சித்திரத் தேர் அமைக்கும் திருப்பணி வேலை சென்ற 22-ந் திகதி சனிக்கிழமை காலை விசேஷ பூஜையுடன் ஆரம்பித்துவைக்கப்பெற்றது. சிற்பாசாரியார் திரு. ஆறுமுகம் சிவரத்தினம் நாள்வேலை செய்வதையும் இந்த வைபவத்தை ஆரம்பித்து வைத்து ஆசியுரை நிகழ்த்திய யாழ்ப்பாணம் நீதவான் திரு. கே. வி. நவரத்தினம், தர்மவள்ளல் திரு. என். கே. மயில்வாகனம் மற்றும் ஆலய பரிபாலகர்களையும் படத்தில் காணலாம்.

## இன்று குருபூஜை

# ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்

## (இலக்கணச்சுவாமிகள்)

'அகத்தும்புறத்தும் சிவன்கழல் ஏந்தியசெல்வர் என்றும், மாபாடியம்பதிப்பித்த மாண்புடைய முனிவர் என்றும், 'ஈழநாடு'ஈன்ற துறவி என்றும்பலசைவப்பெரியார்களாலும் ஆதீனங்களாலும் போற்றப்பட்டு நன்மதிப்பெய்திய இலக்கணச் சுவாமிகளின் 29-வதுகுருபூசைத் தினம் இன்று

இந் நன்னாளில் இம் மகானைப்பற்றி சைவ ஆதீனங்களும், சைவப் பெரியார்களும் எழுதியவற்றிலிருந்து சிலதனிகளைக் கீழே தருகின்றோம்.

-சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணியமுதலியார்.

"நிரம்பிய கல்வியும் ஞானமும் பெற்று விளங்கினரேனும் ஒருசிறிதும் ஆடம்பரமில்லாத தூய தவவொழுக்க வாழ்க்கை வாழ்ந்தனர். தவத்தால் மெலிந்த திருமேனியை உடையவர், அவர்களது பெருமுயற்சியாலே சிவஞானமாபாடியம் முழுவதும் அச்சில் வெளிவந்து ஞானத்தமிழுலகம் விழுமெரண்டு விளங்கக் காரணமாயிற்று. சிவாக்ரபாடியம், சைவசந்நியாசபத்ததி, திருநாரையூர்புராணம் முதலிய பல நூல்கள் தமிழிலும், வடமொழியிலும் வெளிப்படுத்தியவர் இவர்களாவர். தம்மை வந்தடைந்த பக்குவப்பட்ட நன்மாணுக்கர்கள் பலருக்கும் சைவ சாத்திரங்கள், இலக்கண, இலக்கியப்பாடங்கள். சைவப்புராணங்கள் இவற்றை முறையாகப் பாடம் சொல்லி பயிற்றுவிப்பார்கள். யான் எழுதி வெளியிட்டுவரும் பெரிய புராண உரைக்குப் பேராதரவாய் எல்லா வகைகளாலும் ஊன்றுகோலாய் உதவி வந்தனர்"

-திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ., எம். எல்.

'சூரியனூர் கோவில் ஆதீனத்துத்திருக்கூட்டத்தாருள் ஒருவராய் கல்வி' அறிவு, ஒழுக்கங்களாற்சிறந்த ஸ்ரீமத் முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிய



வர்கள் தமது ஞானப்பேராசிரியர் (மகாசந்நிதானம் அவர்கள்) தந்தஆணையைச் சென்னிமேற்கொண்டு தாம் வரைந்து வைத்த சிவஞானபாடியச்சுவடியை ஆராய்ச்சிசெய்து சைவ ஆன்மாக்கள் உய்யும்வண்ணம் அச்சுருத்தி ஏற்றுவித்தார்கள். இப்பெரியார் இவ்வருஞ் செயல் முடித்தற்பொருட்டு.

"மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்-செவ்வி அருமையும் பாரார், அவமதிப்பும் கொள்ளார், கருமமே கண்ணாயினார் என்ற மூதுரைக்கு எவ்வகையிலும் சிறந்ததோர் எடுத்துக் காட்டாக உழைத்த பெருநன்றிக்குத் தமிழுலகஞ் செய்யும் கைமாறு யாதுளது"

-ஸ்ரீ ல ஸ்ரீ ஈசான சிவாச்சாரியார்.

"சைவசித்தாந்த சாத்திரங்களிற் சிறந்து விளங்குவதும் "ஆராய்ச்சி", அநுபூதி" என்னும் இருவகை ஞானங்களுள் 'அநுபூதி" ஞானத்தையே விதந்தெடுத் தோதுவதுமாகிய திருவுந்தியார் திருக்களிற்றுப் படியார் என்ற அரிய சித்தாந்த சாஸ்திரத்தை ஒரு சிவஞானச் செல்வர் அருளிச்செய்த உரையுடன் அதனைத்தேடிப் பிரதி செய்து வைத்திருந்தவர்கள் ஸ்ரீ-ஸ்ரீ முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகளாவார்

தம் வாழ்நாள் முழுவதையும் சிவத்தொண்டுக்கே அர்ப்பணித்த மகான் சிதம்பரம் முத்துக்குமாரசுவாமித்தம்பிரான், தமது 14வது வயதில் வண்ணார்பண்ணையை விட்டுச் சென்று தமிழகத்தில் சைவ சாஸ்திரங்கள் பயின்று துறவு பூண்டார். அன்னார் தமிழகத்தில் பலசிவக்ஷேத்திரங்களையும் தரிசித்து சிதம்பரத்தில் வாழ்ந்து திருத்தொண்டாற்றி 1949ம் ஆண்டு விரோதி வருஷம் சித்திரை மாதம் 10ந்தேதி (22-4-49) தசமி அவிட்ட நாள் கூடிய வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணியளவில் அம்பலவாணர் திருவடி அடைந்தார்கள். அவர்களது மறைவு சைவ உலகத்திற்குப் பேரிழப்பாகும்.

இத்தனைசிறப்புக்கள் பெற்ற குருசுவாமிகள் அவர்களது திருவருளாலேயே 'ஈழநாடு' ஸ்தாபனம் இன்றும் இத்துணைச்சிறந்து விளங்குகின்றதென்பதை பலர் அறிவர்.

சுவாமிகளின் குருபூசை 'ஈழநாடு' காரியாலயத்தில் இன்று காலை 10 மணியளவில் நடைபெறவிருக்கிறது.

— ரவி

## மணிவாக்கு

சென்றதை மறப்பது, நிகழ்காலத்தை நேர்வழியில் செலுத்துவது, வருங்காலத்தைப்பற்றிச்சிந்திப்பது இம்மூன்றும் சந்தோஷ வாழ்க்கைக்கு அடிப்படையானவை.

—கன்பூஷியஸ்.

ஆசிரியருக்குக் கடிதம்

# யாழ். ஆஸ்பத்திரியில் சரும நோயாளரின் துயர்

யாழ். பெரியாஸ்பத்திரியில் சருமநோய் சிகிச்சைநிலையத்திற்குப் போகும் நோயாளர்கள் மிக ஏமாற்றத்துடனும் வேதனையுடனும்தான் திரும்பிப் போகின்றனர். அவர்கள் அங்கு போகும்போது "இங்கே நீங்கள் வரக்கூடாது. வெளி நோயாளர் பகுதிக்குப் போங்கள். அங்கேயுள்ள டாக்டர் இங்கே போங்கள் என்று துண்டு தந்தால் மட்டும் இங்கே வாருங்கள்" என்றுதான் கடுமையான பதில் கிடைக்கிறது.

இதயமில்லாத முறையில் அங்கு கருமங்கள் நடக்கின்றன. போய்ப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை தெரியும். பெருந்தொகையான நோயாளர்கள் வெளியே காத்திருக்க உள்ளே டாக்டர்கள் தங்கள் விடயங்களை சம்பாஷித்துக்கொண்டிருக்கக் காணலாம். அரைமணி நேரத்தில் வந்தநோயாளர்களுக்கெல்லாம் வரும் திகதிகளைக் கொடுத்துவிட்டு அவர்கள் வெளியேறுவார்கள்.

கொடுக்கப்பட்ட திகதியில் வருபவர்கள் மிகச் சிலரே. டாக்டர்கள் உல்லாசமான முறையில் பணிமனைக்குப் போய் வீடு திரும்புகிறார்கள். பாரதூரமான விடயம் என்னவென்றால் உரியகாலத்தில் சிகிச்சைபெறாத நோய் பாரிய நோயாக மாறுவதே! அத்துடன் ஏழைகள் செலவும் செய்ய நேரிடுகிறது.

முன்னர் இருநாது நோயாளிகள் போனாலும் அவர்களை அன்புடன் சோதித்து மருந்து கொடுத்து அனுப்பினார்கள். ஆனால் இதை விடுத்து இப்போது இந்த முறை ஏன் கையாளப்படுகிறது? இதற்குப் பொறுப்பு யார்? பொதுமக்கள் இதைஅறிய விரும்புகிறார்கள். இந்த அநியாயமான முறைச் கைவிடப்பட்டு அன்பு முறை சிகிச்சை நிகழவேண்டுமென்பதே எமது வேண்டுகோள்.

ஒரு சரும நோயாளி
யாழ்ப்பாணம்.

## "சேவையாகவும் கருதவேண்டும்"

(மன்னார்)

"அரசாங்க ஊழியர்கள் தமது கடமைகளைச் சேவையாகவும் கருதவேண்டும். படித்தவர்களுக்கு இருக்கின்ற அறிவும் ஆற்றலும் பாமரனுக்கு இல்லாதிருப்பதால் அவனது பிரச்னைகளைத் தீர்த்துவைக்கும்போது அப்பிரச்னைகளைச் சாமர்த்தியமாக அணுக வேண்டும்."

இவ்வாறு மன்னார் பொது நூலகத்தின் ஆதரவில் நடைபெறும் வாசகர் வட்டத்தின் இரண்டாவது கருத்தரங்கில் உரையாற்றுகையில் மன்னார் காணி அபிவிருத்தி அதிகாரி திரு ஆ. பாஸ்கரதாஸ் குறிப்பிட்டார் பொது நிர்வாகமும் பொதுஜனஉறவும்" என்னும் தலைப்பில் இவர் உரையாற்றினார்.

வாசகர்வட்டத்திற்கு அதன் தலைவர் கவிஞர் கலைவாதி கலீல் தலைமைவகித்தார். பட்டினசபை விசேட ஆணையாளர் திரு ஜோசப் செல்வநாயகம் கூட்டத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். (உ)

# மருந்துகளின் விலை அடுத்த வாரம் முதல் குறையும்

## கூட்டுத்தாபன நடவடிக்கை

(கொழும்பு)

மருந்துவகைகளின் விலைகள் அடுத்த வாரம் தொடக்கம் மருந்தகக் கூட்டுத்தாபனத்தால் நாற்பது சத வீதம் குறைக்கப்படவுள்ளன.

கூட்டுத்தாபனம் 8 கோடி 60 லட்சம் ரூபா பெறுமதி மிக்க மருந்துவகைகளை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யவுள்ளது.

கடந்த சில மாதங்களாக மருந்துகளின் விலை அதிகரித்துள்ளதாகக் கிடைத்த புகார்களையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசின் உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. (உ)

செல்வா நினைவாக

## இலவசபாடநூல்

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வா நினைவாக நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலைய முன்றலில் மே மாதம் 2-ம் திகதி பாடநூல்கள் இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது.

இவ்வைபவத்துக்கு யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு வெ. யோகேஸ்வரன் தலைமைதாங்குவார். இதற்கான ஏற்பாடுகளை நாவாந்துறை இளைஞர் பேரவைத் தலைவரும் மீன்பிடி இயக்குநர் சபை உறுப்பினரும் சென். மேரிஸ் சனசமூக நிலையத் தலைவருமான திரு செ. அமிர்தநாதன் செய்துவருகின்றார். (இ-இ)

"கலவர நேரத்தில் அனுராதபுரம்

# பொலிஸார் ஒழுங்கை நிலை நாட்ட இயன்றவரை பாடுபட்டனர்"

## சன்சோனிக்கமிஷன் முன் மன்னார் மீன்வியாபாரி சாட்சியம்

[அனுராதபுரம்]

"மன்னாரில் நடைபெற்ற தேர்தல் கூட்டங்களில் கூட்டணிக் கூட்டங்களில் சிங்களவர்களைத் தாக்கிப் பேசிய பேச்சு, அங்கு சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் குரோதத்தை ஏற்படுத்தியது.

"சிங்களவர்களை மன்னாரிலிருந்து வெளியேற்றவேண்டுமெனக் கூட்டணிக் கூட்டங்களில் பேசினார்கள். கலவரத்திற்கு முன் எனக்கும் சில்வாவுக்கும் அநாமதேய போஸ்ட் கார்ட்டுகள் கிடைத்தன" "மன்னாரை விட்டு வெளியேறுங்கள்; இல்லையேல் கொலைசெய்யப் படுவீர்கள்" என போஸ்ட் கார்ட்டில் எழுதப்பட்டிருந்தது.

மேற்கண்டவாறு அனுராதபுரத்தில் சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த ஹிக்கடுவையைச் சேர்ந்த வியாபாரியான கனில் பத்மஸிறி கூறினர். அவர் தமது சாட்சியத்தில் தொடர்ந்து கூறியதாவது:

"ஆகஸ்ட் மாதத்தில் நான் மன்னாரில் இருந்தேன். அங்கு மீன், கருவாடு வியாபாரம் செய்தேன். நானே விற்பனை நிலைய உரிமையாளர். மன்னாரில் 7 வருடங்கள் இருந்தேன் அங்கு பெரும்பான்மையோர் தமிழர்கள். 77 தேர்தலுக்கு நான் மன்னாரிலிருந்தேன். கூட்டணிக் கூட்டங்களுக்கு நான் சென்றேன். அவர்கள் தமிழில் பேசியது எனக்கு விளங்கியது. பேசியவர்களைத் தெரியாது. பெண் பேச்சாளர் எவரையும் நான் காணவில்லை.

### அரசியல் தலைவர்கள் சிங்களவருக்கு மாறுகப் பேசினார்கள்

"அரசியல் தலைவர்கள் கூட்டங்களில் சிங்களவர்களுக்கு மாறுகப் பேசினார்கள்.

"கலவரத்தின்போது எனது கடையும் எரிந்தது. எனக்குக் கிடைத்த பயமுறுத்தல் போஸ்ட்கார்ட் கடையிலேயே இருந்தது. கடையுடன் அந்தப் போஸ்ட்காரர்ட்டும் எரிந்துவிட்டது.

"மன்னாரில் குழப்பமேற்படுமெனக் கருதினேன். ஆகஸ்ட் 16ந் தேதி அனுராதபுரம் வந்தேன். 17ந் தேதி மன்னார் செல்வதற்காக நகருக்கு வந்தேன். 16ந் தேதி அனுராதபுரத்தில் தங்கினேன். எனக்கு எவ்வித கஷ்டமும் இருக்கவில்லை. கொள்ளைக்காரர்களைப் பொலிஸார் கைதுசெய்ததைப் பார்த்தேன். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட அவர்கள் இயன்றவரை பாடுபட்டனர்.

### கலவரம் பற்றி அறிந்தேன்

அனுராதபுரம் வந்ததும், கலவரம் பற்றி அறிந்தேன். ரயில் தாக்கப்பட்டதாகவும் அறிந்தேன். மன்னார் செல்ல பஸ்நிலையத்தில் நின்றேன். அங்கு நின்றபோது சில கடைகள் திறந்திருந்தன பொலிஸார் தடியடிப்பிரயோகஞ்செய்து குண்டர்களைக் கலைத்துக்கொண்டிருந்தனர். கொள்ளையடித்தவர்களை பொருட்களுடன் கைதுசெய்து பொலிஸ்வானில் ஏற்றியதைக் கண்டேன்.

### ஒழுங்கை நிலைநாட்டப் பொலிஸார் இயன்றவரை பாடுபட்டனர்

பொலிஸார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டத் தங்களால் இயன்றதைச் செய்தார்கள். அமைதியை ஏற்படுத்தப் பொலிஸார் பாடுபட்டனர்.

மன்னாரை விட்டு வரும்போது என் கடையைப் பார்க்க ஒருவரை விட்டுவந்தேன். செப்டம்பர் 17ந் தேதி மன்னாருக்குப் போனேன். என் கடை முற்றாக எரிக்கப்பட்டிருந்தது. தமிழர்கள் என் கடையை எரித்ததாக அறிந்தேன். யார் நெருப்பு வைத்ததென்று தெரியவில்லை. எனக்கு 44,000 ரூபா நஷ்டமேற்பட்டது. நான் மன்னார்ப் பொலிஸில் புகார்செய்தேன். அரசாங்க அதிபருக்கும் அறிவித்தேன்.

சமூகசேவை இலாகா அதிபரிடமிருந்தும் அரசாங்க அதிபரைப் போய்ச் சந்திக்கும்படி கடிதம் வந்தது.

### தமிழ் உத்தியோகத்தர்கள் சிங்களவருக்கு அநீதி செய்கின்றனர்

தமிழர்களுக்கு மன்னாரில் சமூகசேவைப் பகுதியினர் நிவாரணம் அளித்தனர். சிங்களவரான எனக்கு எவ்வித நிவாரணமும் அளிக்கவில்லை. அப்பகுதியிலுள்ள தமிழ் உத்தியோகத்தர்கள், சிங்களவர்களுக்கு அநீதி செய்துவருகிறார்கள்.

சம் தென்னக்கோன்: அரசியல்கட்சிக் கூட்டத்திற்குப் போனதாகச் சொன்னீர்? ஆம்.

சட்: எந்தக் கட்சிக் கூட்டத்திற்கும் போனீர்? யூ. என். பி., சுதந்திரக்கட்சி, கூட்டணிக் கூட்டங்களுக்குச் சென்றேன்.

சட்: எந்தக் கூட்டத்தில் சிங்களவர் பயமுறுத்தப்பட்டனர்? கூட்டணிக் கூட்டத்தில்.

சட்: உமக்குத் தமிழ் தெரியுமா? எனக்குத் தமிழ் தெரியும். தமிழ் நன்கு தெரிந்தவர்களிடமும் கேட்டேன்.

சட்: நீர் குழப்பம் நடக்குமென எதிர்பார்த்தீர்? ஆம். தேர்தலுக்குப் பின் குழப்பம் அப்பகுதியில் ஆரம்பமாகுமென நினைத்தேன்.

சட்: மன்னாரில் சிங்களமக்களின் தொகை என்ன? ஒரு வீதம் மட்டும்.

சட்: மன்னாரில் சிங்களவர் மிகச் சிறுபான்மை? ஆம்.

சட் சிற்றம்பலம்: 77 தேர்தலில் மன்னாரில் யூ. என். பி யும், கூட்டணியும் போட்டியிட்டன? இல்லை. சுதந்திரக் கட்சியும் போட்டியிட்டது

சட்: யார் சுதந்திரக்கட்சி அபேட்சகர்? ஜோன்மார்க்கா? இல்லை. அவர் சுயேச்சையாகப் போட்டியிட்டார்.

சட்: சுதந்திரக்கட்சி சார்பில் யார் போட்டியிட்டார்? தெரியாது.

சட்: சிங்களவர் எவரும் போட்டியிடவில்லை? இல்லை

சட்: போஸ்ட்கார்ட் பற்றிக் கூறினீர்? ஆம்.

சட்: என்ன மொழியில் வந்தது? தமிழில்.

அனுராதபுரம் புகையிரத நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் இரகசியமாகச் சாட்சியமளித்தார். அனுராதபுரம் ரயில்வே சுப்பிரின்டன் குணசேகராவும் இரகசியமாகச் சாட்சியமளித்தார்.

வவனியாம் பொலிசைச்சேர்ந்த ஆனோக முதியன்சலாகே முத்துபண்டா (26 வயது) சன்சோனிக்கமிஷன்முன் கூறியதாவது:

வவனியா மேலதிகாரி எல்லை தன்தாவேலுகளுடன் இங்கு சாட்சியம் அளிக்க அனுப்பினர். நான் தன்தாவேலுகள் கொண்டுவந்துள்ளேன். (குட்கேசைத் திறந்து ஒரு துண்டுப்பிரசுரத்தை சமர்ப்பிக்கிறர்.) இத்துண்டுப்பிரசுரம் வவனியா நீதிமன்ற வழக்கில் சம்பந்தப்பட்டது. 11 துண்டுப்பிரசுரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

செப்டம்பர் 4ம் தேதி இந்த துண்டுப்பிரசுரம் பொலிஸ் அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது. கான்ஸ்டபிள் பெரேரா லொக்குபண்டா இருவரும் துண்டுப்பிரசுத்தைச் சமர்ப்பித்தனர். தமிழில் துண்டுப்பிரசுரம் உண்டு இத்துண்டுப்பிரசுரம் பொலிசார் இரவு ரோந்துசென்றபோது சந்தேக நபர் ஒருவரைத் தேடிச் சென்றபோது கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக வழக்கொன்று வவனியா நீதிமன்றத்தில் இருக்கிறது. வாசிபுரத்தைச்சேர்ந்த ராசா வசித்திலிங்கம் அந்த வழக்கில் எதிரியாவார்.

இத்துண்டுப் பிரசுரத்தைக் கைப்பற்றிய பொலிசாரை கொழும்புக்கு அழைப்பதாக சட்டத்தரணி தென்னக்கோன் கூறினர். [க-அ]

கூட்டணித்தலைவர்களின் உரைகளால்

# வவனியாவில் சிங்கள அரச ஊழியரும் பயந்திருந்தோம்

## சிங்களப் பிரிவு ஏ. ஜி. ஏ. சாட்சியம்

— கா. யோகநாதன் —

[அனுராதபுரம்]

கடந்த தேர்தல்காலங்களில் இனக்குரோத பேச்சுக்கள் கூட்டணிக்கூட்டங்களில் இடம் பெற்றது. இதனால் சிங்களவர் பயத்துடன் வாழ்ந்தார்கள். வவனியாவிலுள்ள சிங்களவர் தேர்தல் முடிந்ததும் எல்லைக்கு வெளியில் விரட்டியடிக்கப்படுவார்கள் எனக்கூட்டணிக் கூட்டங்களில் கூறினார்கள். இதனால் வவனியாவில் உள்ள சிங்கள மக்கள் மட்டுமன்றி அரச உத்தியோகத்தர்களான நாங்களும் பயந்திருந்தோம்.

சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த வவனியா சிங்களப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. ரஞ்சன் சமரவீர மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும்கூறியதாவது: உத்தியோக வேலைகளுக்குச் செல்ல-வாகன வசதி எனக்கு அளிக்கப்படவில்லை. எனக்கு வழங்கப்பட்ட ஜீப் 77 பெப்ரவரியில் பழுதடைந்துவிட்டது 5 ஸ்ரீ 329 இலக்கத்தையுடைய எனது ஜீப்பை திருத்தும்படி பலதடவை கடிதம் எழுதினேன். வவனியா அரசாங்க அதிபர் எனது சாரதியை இடமாற்றம் செய்தார். அந்தநேரம் திரு. சிவஞானம் அரசாங்க அதிபராக இருந்தார். பகுதிக்கு புதியவனதலால் ஜீப் தேவைதனை அவரிடம் கூறினேன். தமிழ்ப் பிரிவு ஏ. ஜி. ஏ. க்கு ஒரு ஜீப் வழங்கப்பட்டது. தமிழ் ஏ. ஜி. ஏ. க்கள் கஷ்டப்படவில்லை.

### தேர்தலுக்கு ஜீப் திருத்தப்பட்டது

தேர்தலுக்கு முன் எனது ஜீப் திருத்தப்பட்டது. கொஞ்சகாலம் பாவித்தேன். தேர்தல் சமயம் இந்த ஜீப் கச்சேரிக்குக் கொண்டுசெல்லப்பட்டது, வவனியாவில் மற்ற இலாகாக்களிடமிருந்தும் ஜீப்புக்கள் எடுக்கப்பட்டது. தேர்தல் சமயத்தில் எனது பிரிவில் தேர்தல் அதிகாரியாக நான் நியமிக்கப்பட்டேன். எனக்கு ஜீப் வழங்கப்படவில்லை, தமிழ் உத்தியோகத்தர்கள் இப்படிக் கஷ்டப்படவில்லை. நான் இது பற்றி ஜி. ஏக்கு கூறினேன். எனக்கு ஜீப் வழங்குமாறு அறிவித்துள்ளதாக ஜி. ஏ. கூறினர், நான் அந்த உத்தியோகத்தரிடம் போய்க் கேட்டபோது மறுத்திப்பதாகக் கூறினர். ஒரு ஜீப் மட்டும் கச்சேரியில் நிற்பதாகவும், அது அவசர தேவைக்கு இருப்பதாகவும் அவர் பின்னர் கூறினர். அவர்கள் நினைத்திருந்தால் எனக்கு ஒரு ஜீப் தந்திருக்கலாம். தேர்தல் முடியும்வரை ஜீப் தரவில்லை.

கமிஷனர்: எப்படி வேலைக்குப் போனீர்? தேர்தல் நடந்த 2 தினங்களும் நான் கந்தோரில் இருந்தேன்,

கமிஷர்: தேர்தல் வேலைக்கு நீர் போகவில்லையா? அப்பகுதியை மேற்பார்வையிடும்படியும், உத்தியோகத்தர்களைக் கண்காணிக்கும்படியும் கூறினர்கள். எனக்கு ஜீப் இல்லாததினால் கந்தோரில் இருந்தேன்.

77 ஜனவரிமாதம் கடைசியில் சுப்பிரமணியம் 103 லாட் மரம் வைத்திருப்பதாகத் தக

[5 ம் பக்கம் பார்க்க]

L. P. காஸ் காட்டும் வழி

★ சுகாதாரத்திற்கு. ★ நேரத்தை மிச்சப்படுத்துவதற்கு ★ பணத்தை சேமிப்பதற்கு ★ பாத்திரத்தில் கரி பிடிக்காமல் எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு ★ உணவின் ருசி கெடாமல் இருப்பதற்கு ★ வீட்டு வேலைக்கு ஆள் இல்லை என்ற குறையைப் போக்குவதற்கு ★ சமையல் அறையை எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு இன்றே பாவிக்கத் தொடங்குங்கள். L. P. காஸ்

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள் !

எஸ். பி. சாமி அன் கோ.

193, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி; 7025

தலைமைக் காரியாலயம்,
72, 4-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.
போன்: 22640.

# போராட்டத்திற்கு அஞ்சுபவர் அல்லர் நாம் எனினும்...

## 'அமிர்' சொல்கிறார்

[நெல்லியடி].

''தமிழ்பேசும் இனத்திற்கென தனிநாடு கேட்பதில் தமிழ்பேசும் மக்கள் இன்று ஒன்றுபட்டுவிட்டார்கள். 1972ம் ஆண்டு கட்சிகளுக்கு மத்தியில் ஒற்றுமை ஏற்பட்டாலும் தற்போதுதான் அது பூரண ஒத்துழைப்பை மக்கள் மத்தியில் காணமுடிந்துள்ளது. மக்களின் ஒற்றுமையும் தனிநாட்டின் அவசியமும் கடந்த ஆகஸ்ட் வன்முறைகளுக்கு பின்பே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது''

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உடுப்பிட்டித் தொகுதியிலிருந்து தம்மைச் சந்திக்க வந்த சுமார் 50க்கு மேற்பட்ட இளைஞர்கள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

நாம் என்றுமே போராட்டத்திற்கு பயந்தவர்களோ அன்றி சலித்தவர்களோ அல்ல; நாட்டின்நிலை எமது பலம், மக்கள் சக்தியின் திரண்டநிலை என்பவற்றை அவதானத்தில் கொண்டே களத்தில் குதிப்போம். அதற்கு இளைஞர்களாகிய உங்களின் பேராதரவு என்றென்றும் அத்தியாவசியமானது'' என்றார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் பேசினார். குழுவிற்கு திரு. எஸ். கருணரட்ணம் தலைமைதாங்கிச் சென்றிருந்தார். இச்சந்திப்பு காங்கேசன்துறையில் எதிர்க்கட்சித்தலைவரின் இல்லத்தில் நடைபெற்றது. (உ)

## கள்ளுத் தவறணைகள் திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

இன்று வடபகுதியில் உள்ள தெங்கு-பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவு ஸ்தாபனக் கள்ளுத் தவறணைகள் வழக்கம்போல் திறக்கப்பட்டிருக்கும்.

எனினும் தவிர்க்கமுடியாத நிலை ஏற்படுமிடத்து அவை மூடப்படலாம் என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் ஏனைய பாகங்களில் இன்று தவறணைகள், மதுவிற்பனை நிலையங்களை மூடும்படியாக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது தெரிந்ததே. (உ)

## மா அன்பளிப்பு

(கொழும்பு)

பல நாடுகள் இவ்வருடம் இலங்கைக்கு 75,000 தொன்னுக்கு மேலான கோதுமை மாவை அன்பளிப்புச் செய்யவிருக்கின்றன.

கனடா, பிரான்ஸ், சுவீடன் முதலான நாடுகளே இம்மாவை அன்பளிப்புச் செய்துள்ளன. (உ)

## வாள்வெட்டு

(பண்டத்தரிப்பு)

இருகும்பங்களிடையே ஏற்பட்ட தகராறை அடுத்து கூடப்பிறந்த அண்ணனின் கையை வாளினால் வெட்டினாராம் தம்பி ஒருவர்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அருணன் நடராசா என்பவரே இவ்வாறு வாளினால் வெட்டப்பட்டு யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சங்கானை பொலிஸ் நிலையத்தில் இதுசம்பந்தமாக செய்யப்பட்ட புகாரையடுத்து அருணன் வெசம்பு என்பவரை சந்தேகத்தின்பேரில் சங்கானைப் பொலிசார் தேடிவருகின்றனர். (உ)

## மேதினம் வந்தது!

அக்கினிப்பூக்கள் ஆயிரமாயிரம்
அவனியிற் பூக்க — நில
மக்களின் வாழ்வில் இல்லாமையெனும்
மகிமைகள் ஆக்க — இன்று!

மேதினமென்றொரு நாள் வந்தது
மக்களுழைப்பை நிரப்ப — உயர்
மேதினி சிறந்து விளங்கியேநிதம்
மாயுகம் பரப்ப — இன்று

— பொன். பொன்ராசா

## வித்தியாதிபதி, எம், பி.க்கு மகஜர்

[மட்டுவில்]

''நாற்றிம்பத்து மாணவர் பயிலும் இப்பாடசாலையில் மலசலகூட வசதியில்லை, போக்கு வரத்து வசதியில்லை, விஞ்ஞானகூட வசதியில்லை, இவற்றை நிவர்த்திப்பதுடன் ஆசிரியர் தங்கும் விடுதியும் அமைத்துத்தருவதோடுடைசி இரண்டு பயிற்றப்பட்ட ஆசிரியர்களையாவது தரவேண்டும்.''

இவ்வாறு கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன்பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கம், வடமாநில வித்தியாதிபதிக்கும், சாவகச்சேரி எம். பி, திரு. வி. என். நவரத்தினத்திற்கும் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், அதிபர் திரு.நாகராஜா தலைமையில் நடைபெற்றது. இந்தப் பொதுக்கூட்டத்திலேயே இந்த மகஜருக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (உ)

## கூட்டணிக்கிளை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைக் கூட்டணி அலுவலகத்தில் எம். பி. தலைமையில் நடைபெற்றது.

புதிய உத்தியோகத்தர் விபரம் வருமாறு:

தலைவர்: கா. பொ. இரத்தினம் (எம். பி.), துணைத்தலைவர்: க. சோமசுந்தரம் (புங்குடுதீவு), செயலாளர்: அ. போல், (நாரந்தனை), துணைச்செயலாளர்: மு. மயில்வாகனம் (அனலைதீவு), பொருளாளர்: இ. இராஜரத்தினம் (வேலணை).

செயற்குழு உறுப்பினர்கள்: வே. சுந்தரலிங்கம் (ஊர்காவற்துறை), இ. நா. மதியாபரணம் (நயினாதீவு), வி. இ. இமானுவேல் (மண்டைதீவு), வ. சபாரத்தினம் (அல்லைப்பிட்டி) வி. அலோசியஸ் பொஞ்இன் (ஊர்காவற்றுறை), ஆ. ச. திருநாவுக்கரசு (எழுவைதீவு), டாக்டர் இ. கணேஷ் (புங்குடுதீவு), மு. சண்முகசேகரம் (புங்குடுதீவு), இ. கந்தசாமி (மண்டைதீவு), இ. நகுலேஸ்வரன் (சரவணை). (இ)

## வவனியாவில் —

[4-ம்பக்கத் தொடர்ச்சி]

வல் கிடைத்தது. நான்போய் சோதனையிட்டு 92 லோக் மரங்களைக் கண்டுபிடித்தேன். நான் போய் இதுபற்றி ஜி. ஏ. க்கு கூறினேன். அவரை எச்சரிக்கும்படி கூறினேன், இதுவரை எதுவும் நடக்கவில்லை.

மரம் கடத்தப்படுவதாக கிராமசேவகர் தகவல் தந்தார் உடனடியாக அந்த இடத்திற்கு சென்றேன் லொறியில் மரம் ஏற்றப்பட்டிருந்தது பெர்மிட் இருக்கிறதா என்று கேட்டேன். அவரிடம் பெர்மிட் இருக்கவில்லை. என் கந்தோருக்கு லொறியைக் கொண்டுவரும்படி சொன்னேன் இரவு 9 மணி வரை விசாரணை நடந்தது காட்டுப் பகுதி அதிகாரி அவ்விடம்வந்து அதற்கு அனுமதித்தார். அவர் பெர்மிட் ஒன்று கொண்டுவந்தார். இரவில் பெர்மிட் வழங்குவது வழக்கமானதல்ல.

கமிஷனர்: அவர் பெயர் என்ன? காசி செபமாலை. புதிய சின்னக்குளம் என்ற கிராமம் உண்டு. அங்கு வசிப்பவர்கள் எல்லாரும் தமிழரும், சட்டவிரோதமாக மரம் தறிப்பதாக தகவல் கிடைத்தது. நான் போய்ப்பார்த்ததும் 14 'லோக்' மரம் தறிக்கப்பட்டது. அரசாங்க அதிபருக்கு இந்த மரங்களை ஏலமிடும்படி 77 ஆகஸ்ட் 15ம் தேதி அறிவித்தேன். இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### தமிழர் சுற்றிவர வாழ்ந்தார்கள்

தேர்தல் காலத்தில், இனக்குரோத பேச்சுகள் கூட்டணி கூட்டங்களில் இடம்பெற்றன. நான் அக்கூட்டங்களுக்குச் செல்லவில்லை. அரசாங்க உத்தியோகத்தர் என்ற முறையில் நான் செல்வது நல்லதல்லவெனக் கருதினேன் எனக்குத் தமிழ் தெரியும். இக்கூட்டங்களுக்குப்பின், சிங்கள மக்கள் பயத்துடன் வாழ்ந்தார்கள். வவனியாவில் உள்ள சிங்கள மக்கள் தேர்தல் முடிந்ததும், எல்லைக்கு வெளியில் விரட்டியடிக்கப்படுவார்கள் எனக் கூட்டங்களில் கூறப்பட்டது. தமிழர் சுற்றிவர வாழ்ந்தார்கள்.

கூட்டணித் தலைவர்களின் பேச்சுக்கள், சிங்கள மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியது தேர்தலுக்குப்பின் சிங்களவர் அங்கு வாழப்பயப்பட்டனர். பல தடவை என்னிடம் வந்து தாங்கள் பயப்படுவதாகக் கூறினார்கள். கிராமத்தவர்கள் மட்டுமன்றி, அரச உத்தியோகத்தர்களான நாங்களும் பயந்திருந்தோம்.

ஆகஸ்ட் 18ம் தேதி இரு சிங்களக் கடைகளுக்கு தீ வைக்கப்பட்டது இதுதான் வவனியாவில் நடந்த முதல் சம்பவமாகும். காசிப்பிள்ளை கடைக்கு அருகில் சிங்களவர் வழிப்பறி செய்யப்பட்டு பணம், மோதிரம், கைக்கடிகாரம் கொள்ளையடிக்கப்பட்டதாக எனக்குத் தகவல் கிடைத்தது. இது ஆகஸ்ட் 16 அல்லது 17ல் நடந்தது.

கமிஷனர்: ஆகஸ்டிலா?

ஆம் வவனியா ஜி ஏ. என்னை ஒரு மகாநாட்டிற்கு அழைத்திருந்தார். கிராம மக்களைச் சந்தித்து பயப்படவேண்டாம் எனக் கூறச் சொன்னார். வதந்தியை நம்ப வேண்டாம் என்றும் கூறச் சொன்னார். சம்பவம் எதுவும் நடந்தால் உடனடியாகப் பொலிசாருக்கு அறிவிக்கும்படி சொன்னார். இந்த நேரம் என் ஜீப் கச்சேரியில் இருந்தது. ஜி. ஏ. கூறியபடி, நான் கிராமத்துக்குச் சென்று மக்களைப் பயப்படாமல் இருக்குமாறு கூறினேன். சிங்களச் சாரதி, தமிழ் மேலதிக ஜி. ஏ. யுடன் தமிழ்ப்பகுதிக்கு செல்ல பயப்பட்டார். 18ம் தேதி அவர் வேலைக்கும் போகவில்லை. அந்தச் சாரதியிடம், என் பிரிவில் வந்து வேலை செய்யும்படி கூறினேன்: அதற்கு அவர் சம்மதித்தார். அந்தச் சாரதியுடன் ஜீப்பில் இராமத்திற்குச் சென்றேன்.

பயப்படவேண்டாமென்றும், வதந்திகளை நம்பவேண்டாமென்றும் ஜி. ஏ யும், பொலிசாரும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவார்கள் என்றும் கூறினேன். ஏதாவது சம்பவம் நடந்தால், பொலிஸுக்கு போகும்படி கூறினேன். எங்கள் பிரிவு சிங்களப் பிரிவு என அழைக்கப்பட்டாலும், இங்கு தமிழர் வாழ்வதாகவும், சகோதரர்கள்போல் வாழவேண்டும் என்றும் கூறினேன்.



# பிரிட்டிஷ் டீசல் ட்ரக்குகள் மிக உன்னத நிலையில்

அமெரிக்க ஐக்கிய தேசத்தில் (U. K.)உள்ள பிரிட்டிஷ் லெறியிலக் பிரிவினரால் சகலவகையிலும், நேர்த்தியாகத் தயார்க்கப்பட்டவை. கட்டணம் இலங்கை ரூபா நாணயத்தில் பின்வரும் விலைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

| | 1973 | 1974 | 1975 |
|---|---|---|---|
| ∴ பிரிட்டிஷ் லேலண்ட் FG 350 1½ தொன் துணை அமைப்பு அல்லது பாதி அமைப்பு | 65,000 | 75,000 | |
| ∴ பிரிட்டிஷ் லேலண்ட் FG 350 1½ தொன் பூரணப்படுத்தப்பட்ட அமைப்பு வான் | 72,000 | 82,000 | |
| ∴ பிரிட்டிஷ் லேலண்ட் சேபா (SHERPA) 22 அந்தர். இறந்த சிரனைப்பு வான் | | | 82,000 |
| ∴ பிரிட்டிஷ் லேலண்ட் சேபா(SHERPA) 22 அந்தர் கூடியவேகம் | | | 84,000 |
| ∴ பிரிட்டிஷ் லேலண்ட் ரெறியர் (TERRIER) 5தொன் துணை அமைப்பு அல்லது பாதிஅமைப்பு | 87,500 | 97,500 | |
| ∴ பிரிட்டிஷ் லேலண்ட் ரெறியர் (TERRIER) முழுவோக பொடி | 1,12,500 | 1,22,000 | |
| ∴ பிரிட்டிஷ்லேலண்ட் பொக்ஸர் (BOXER) 6தொன் துணை அமைப்பு அல்லதுபாதிஅமைப்பு | 1,00,000 | 1,12,000 | |
| ∴ பிரிட்டிஷ்லேலண்ட் மாஸ்ரிப்(MASTIFF) 11தொன் துணை அமைப்பு அல்லதுபாதிஅமைப்பு | 1,61,000 | | |
| ∴ கொமர் வோக்துறு (WALKTHRU) 2.45 தொன் முழு பொடி | 78,000 | 90,000 | 1,04,000 |

கொள்வனவுக்கட்டளைகள் கிடைத்த திகதியில் இருந்து 8-10 வாரங்களுக்குள் விநியோகம் செய்யப்படும்.

வர்த்தக விசாரணைகள்:

## அப்பிள் பீல் லிமிட்டெட்

20 டி, கில்போட் கிறஸ்சென்ட், கொழும்பு-7

9155

# 'உலகக் கவிஞர்வரிசையில் பாவேந்தர் பாரதிதாசன்''

## நினைவு விழாவில் தமிழகமந்திரி பாராட்டு

சென்னை, ஏப். 30

''உலகக் கவிஞர் வரிசையில் இடம்பெறத் தக்க தகைமைபெற்றவர் பாவேந்தர் பாரதிதாசன்'' என்று சென்னையில் நடைபெற்ற பாவேந்தர் பாரதிதாசன் நினைவு விழாவில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

தமிழக அரசினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நினைவு விழா சென்னையில் நேற்று ஆரம்பமானது.

தமிழ்நாடு நிதியமைச்சர் நாஞ்சில் கி. மனோகரன் இவ் விழாவைத் துவக்கி வைத்துப் பேசினார்.

தமது உரையில் அவர் கூறியதாவது: பாவேந்தர் பாரதிதாசன் உலகக் கவிஞர் வரிசையில் இடம்பெறத்தக்க தகைமைபெற்றிருந்தார்.

### ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால்...

அவரது கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் அவை ஆங்கிலக் கவிஞர்களுக்கு இணையானவையாக இருக்கும்.'' என்றார்.

இவ்விழாவுக்கு தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு. அரங்கநாயகம் தலைமை தாங்கினார்.

பாரதிதாசனின் சீர்திருத்தக் கருத்துக்கள் தமிழ்நாடு முழுவதும் பரப்பப்படவேண்டும் என்று அவர் தமது உரையில் கூறினார்.

### சிறப்புவிருந்தினர் கண்ணதாசன்

விழாவின் சிறப்பு விருந்தினராக தமிழக அரசின் ஆஸ்தானக் கவிஞர் கண்ணதாசன் கலந்துகொண்டார்.

தமக்கும் பாரதிதாசனுக்கும் இடையில் இருந்த தொடர்பை அவர் எடுத்துரைத்தார்.

### எம். ஜி. ஆர்.

விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கலந்து கொள்ளவிருந்தார்.

தர்மபுரி மாவட்டத்திலும் பாவேந்தர் நினைவுதினம் நேற்று கொண்டாடப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் நடைபெற்ற விழாவில் கருத்தரங்கு கவிநிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன. (உ)

## புனரமைப்பு

(வேலணை)

நயினாதீவு தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புக்கூட்டம் நயினாதீவு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய முன்றலில் திரு. கா. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர்கள் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. அ. நல்லையா உபதலைவர்: மு. கந்தசாமி, செயலாளர்: இ. கனகசபை, உபசெயலாளர்: மா. வேதநாதன், தனாதிகாரி: அ. மு. மார்க்கண்டு. (உ)

''ம. கி. விவகாரம்:

# சமரஸத் தீர்வுக்கான சாத்தியம் அற்றுவிடவில்லை''

ரோம், ஏப். 30

மத்திய கிழக்கு விவகாரத்தில் சுமுகத் தீர்வு காணக்கூடிய வாய்ப்புகள் உண்டு என்று நேற்று ரோமாபுரியில் பாப்பரசர் போல் நம்பிக்கை தெரிவித்தார்

பாலஸ்தீனியர்க்கு நீதி கிடைக்கக்கூடிய விதத்தில் தீவிரமாக செயற்படுமாறு அவர் ஜோர்தானிய மன்னர் ஹூசெய்னைக் கேட்டுக்கொண்டார்.

### பெகின் வாஷிங்டன் விஜயம்

இது இவ்வாறு இருக்க, இஸ்ரேலிய பிரதமர் பெகின் ம. கி. விவகாரம் குறித்துத் தம் தம் நிலையை விளக்கும் பொருட்டு அமெரிக்கா செல்லவிருக்கிறார்.

ஜனாதிபதி கார்ட்டரைச் சந்தித்து அவர் உரையாடுவார்.

கடந்த ஏழு வாரகாலத்துள் திரு. பெகின் அமெரிக்காவுக்கு மேற்கொள்ளும் இரண்டாவது விஜயம் இதுவாகும். (உ)

பத்திரிகை அலுவலகம்

## மூடப்பட்டதை எதிர்த்து பாகிஸ்தானில் உண்ணாவிரதம்

இஸ்லாமாபாத், ஏப். 30

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் சுல்பிகார் அலிபூட்டோவின் அறிக்கை ஒன்றினை வெளியிட்டதற்காக பத்திரிகை அலுவலகம் ஒன்று மூடப்பட்டது குறித்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட விருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

உருது மொழித்தினசரி ஒன்றில் இவ்வறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

இதேவேளை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் இராணுவ அரசால் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். (உ)

ஆப்கானிஸ்தானில்

## சரண்புக மறுத்த உபஜனாதிபதி இரு மந்திரிகள் கொலை

காபூல், ஏப். 30

ஆப்கானிஸ்தான் புரட்சிப் படையிடம் சரண்புக மறுத்த ஆப்கானிஸ்தான் உப ஜனாதிபதியும் இரு அமைச்சர்களும் விமானப்படைத் தளபதியும் கொலை செய்யப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

### செந்நிற கழுத்துப்பட்டி

இதேவேளை, ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் மாணவர்கள் செந்நிற கழுத்துப்பட்டி அணிந்து காணப்படுகின்றனராம்.

இவர்கள் வாகனப் போக்குவரத்துக்களைக் கட்டுப்படுத்தியதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

காபூலில் நேற்று மீண்டும் கடைகள் திறக்கப்பட்டன.

### டாங்கிகள் நடமாட்டம்

டாங்கிகளும், கவசப் படைகளும் வீதியில் நடமாடக் காணப்பட்டதாகவும், சண்டை நிறுத்தப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

பழைய அரசின் உயர்தர அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

### மாஜி மன்னர் கருத்து

இது இவ்வாறிருக்க ஆப்கானிஸ்தானின் புதிய அரசு இடதுசாரிக் கொள்கை உடையது தான் என்று தற்போது ரோமாபுரியில் உள்ள ஆப்கானிஸ்தானின் முன்னாள் மன்னர் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் கடந்த வியாழக்கிழமை இராணுவப் புரட்சிமூலம் ஆட்சி கைப்பற்றப்பட்டது என்பது தெரிந்ததே. ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி தாவூத்தும் கொல்லப்பட்டுவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## மருந்துகள் மீட்பு

சென்னை, ஏப். 30


சென்னையில் உள்ள விடுதி ஒன்றில் திடீர் சோதனை நடத்திய போலிசார் அங்கிருந்து அரசாங்கத்துக்குச் சொந்தமான 50,000 ரூபா பெறுமதிவாய்ந்த மருந்து வகைகளைக் கைப்பற்றினர்.

இது சம்பந்தமாக ஒருவர் போலிசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். (உ)

## பளையில் ஒருவர் கொலை

(பளை)

பளை பொலிஸ் பகுதியைச் சேர்ந்த பூநகரி என்ற இடத்தைச் சேர்ந்த எம். ராஜு என்பவர் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

பாதுகாப்பு, நம்பிக்கை, சௌகரீகம்

இத் தனிச் சிறப்புக்கள், இலங்கை அடங்கிலுமுள்ள, முதலீடு செய்வோர்களிடையே பொது வழக்குச் சொற்களாகி, ஹவுஸ் அன்ட் புரொப்பெர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்டெட்டின் முதலீட்டு திட்டங்களுக்கு சிறந்த மவுசை ஏற்படுத்தியுள்ளன.

நீங்கள் முதலீடு செய்யும்போது உங்கள் பணத்திற்கு சம்பூரணமான முதலீட்டு பாதுகாப்பு அளிக்கப்படுகிறதா என்பதையும் அவ்வாறான முதலீடு, சராசரி வருமானத்திற்கு மேற்பட்ட வருமானத்தையும் உத்தரவாதங்களையும், தனிப்பட்ட விசேஷ சேவை வசதியையும் அளிக்கிறதா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். இவ் வசதிகளை எம்மிடம் முதலீடு செய்வோர் சுமார் இருபது ஆண்டுகளாக பெற்று இன்புற்றுவருகிறார்கள்.

முதலீட்டுத் திட்டங்கள்

| குறுகிய காலம் | நீண்ட காலம் | கால வைப்புகள் |
|---|---|---|
| 12% | 17 1/2% | 18% |
| ''முதலீட்டு சான்றிதழ்'' வட்டியுடன் முதலீடு செய்த பணத்தை வட்டியுடன் இலகுவில் மீட்டுக்கொள்ளலாம். | 1 வருடம் - 14 1/2% வருடமொன்றுக்கு<br>2 வருடம் - 15% வருடமொன்றுக்கு<br>3 வருடம் 15 1/2% வருடமொன்றுக்கு<br>4 வருடம் - 16% வருடமொன்றுக்கு<br>5 வருடம் - 16 1/2% வருடமொன்றுக்கு<br>6 வருடம் - 17 1/2% வருடமொன்றுக்கு<br>முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக் கொள்ளலாம். | 6 மாதங்கள் - 12% வருடமொன்றுக்கு<br>12 மாதங்கள் - 15% வருடமொன்றுக்கு<br>18 மாதங்கள் - 18% வருடமொன்றுக்கு<br>முதலீட்டை அனுகூலங்களுடன் மீட்டுக் கொள்ளலாம். |
| மாதாந்த வட்டி | மாதாந்த வட்டி | முதிர்ச்சியின் பேரில் வட்டி |

ஹவுஸ் அன்ட் புரொப்பெர்ட்டி ட்ரேட்ஸ் லிமிட்,
HPT பில்டிங், கொழும்பு-8 த. பெ. இல. 1077.
தெலெக்ஸ்: 1203 கொழும்பு, போன்: 94356. 94320
கிளை அலுவலகங்கள்;
★ 2 - 8, நவீன சந்தை, பெரியகடை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7698
★ 8, புத்தளம் ரோட், குருணாகல்.
(RAVI)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
விஜயகுமாரி
நடித்த
தாயில்லாக்குழந்தை

வெல்லி
(சாவகச்சேரி)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா
கலாட்டா
கல்யாணம்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692
சிவாஜி - தேவிகா
(யாழ். நகர்)
ஆண்டவன் கட்டளை

வெற்றிகரமான 2-வது மாதம்
மனோகரா
தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

கடைசி சில தினங்கள் மட்டும்
ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
இதுவரை யாழ். நகரில் திரையிடப்பட்ட பழைய படங்களின் வசூலை முறியடித்து சாதனை புரிந்துள்ள
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா
நடித்த
விக்கிரமாதித்தன்
(புதிய பிரதி)

5ந் திகதி முதல்
முத்துராமன், ஸ்ரீவித்யா, சந்திரகலா நடித்த
காலங்களில் அவள் வசந்தம்

5-வது வெற்றி வாரம்
ராணி
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று

சில தினங்கள் மட்டும்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி.ஆர்., விஜயா, நாகேஷ்
நடித்த
நல்லநேரம்

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன்
நடித்த
ஜானகி சபதம்

Regal (Jaffna) 2nd Crowred Week
Daily 4-45, 7-00 and 9-80 p.m.
TONY CURTIS ROGER MOORE in
SPORTING CHANCE
(Color) (Spy Film)

Rio (Jaffna)
(Phone; 7607)
Now showing
To all Patrons Newly Rectifed Sound System
By Siwclair Radio Nics
Man in the Iron Mask
(Family Entertainmen)

சாந்தி
(யாழ். நகர்) போன்: 7049
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
4-வது கடைசி வாரம்
சிவாஜி நடிக்கும்
கந்தன்கருணை
ஈஸ்ட்மன் கலர்
மே. 6-ம், 7-ந் திகதி சனி, ஞாயிறு காலை 8-30 மணிக் காட்சி மட்டும்.
THE THREE FAT MEN


"கலவரசமயத்தில்

# தமிழ்க் கிராமத்திற்கு நான் போகவில்லை"

## சிங்களப்பிரிவு ஏ.ஜி.ஏ.தொடர்ந்துசாட்சியம்

(அனுராதபுரம்)

"கலவர சமயத்தில், ஒரு தமிழ்க் கிராமத்தில் என்னைக் கண்டதாக இன்ஸ்பெக்டர் நாதன், யாழ்ப்பாணத்தில் நடந்த விசாரணையில் கூறியிருந்தார். நான் அந்தத் தமிழ்க் கிராமத்திற்குச் செல்லவில்லை."

இவ்வாறு வவனியா தெற்கு சிங்களப் பிரிவு அரசாங்க அதிபர் திரு. ரஞ்சன் சமரவீர சன்சோனிக் கமிஷன் முன் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

"யாழ்ப்பாணத்தில் நடந்த கமிஷன் விசாரணையைப் பத்திரிகைகளில் படித்தேன். சட்டவிரோத நடவடிக்கைகளில் வவனியாவில் யார் ஈடுபட்டார்கள் என்று எனக்குத் தெரியாது.

"இன்ஸ்பெக்டர் நாதன் என்னை ஒரு கிராமத்தில் சந்தித்ததாக, யாழ்ப்பாண விசாரணையில் சாட்சியமளித்த போது கூறினார். நான் இக்காலத்தில் அந்தத் தமிழ்க் கிராமத்திற்குச் செல்லவில்லை. அப்பகுதிக்குப் போகப் பயந்திருந்தேன். இரவில் வெளிக்கிடுவதில்லை. என் ஜீப்பை ஆகஸ்ட் 15ம் கச்சேரிக்குக் கொடுத்திருந்தேன். பொலிஸார் அந்த ஜீப்பைப் பாவித்தனர். சுப்பிரமணியத்தின் வீடு எரிந்த பின், என்னை வந்து உதவிசெய்யும்படி கூறினார். நான் கிராமசேவகரிடம் சுப்பிரமணியத்திற்கு உதவும்படியும் கூறினேன்.

"சுப்பிரமணியத்திடம் மனைவி, பிள்ளைகளைக் கொண்டு வரவேண்டாமெனவும் தனியே வரும்படியும் சொன்னேன். அவர் தனது சாமான்களைக் கொண்டுசெல்லத் தேவையான உதவிகளைச் செய்தேன். அவர் தன் சாமான்களைக் கொண்டுசென்றதாகப் பின்னர் அறிந்தேன்.

"மாமடுவிற்கு அருகில் வீமன்கல்லு என்ற தமிழ்க் கிராமம் உண்டு. அங்குள்ள தமிழ் வீடுகள் எரிக்கப்பட்டன. கிராமம் தரைமட்டமாக்கப்பட்டது. வீமன்கல்லு என் பிரிவுக்குள் வருகிறது. யூ. என். பி. அமைப்பாளர் திரு. புலேந்திரன் அங்கு என்னைக் காரில் கூட்டிச் சென்றார். சிங்கள மக்கள், தமிழ் மக்களைச் செல்லாமல் தடை செய்திருந்தனர். வீமன்கல்லுக்குச் சிங்களக் கிராமத்தினூடாகச் செல்லவேண்டும். வீமன்கல்லுக்குச் சாமான்களை எடுக்கச்சென்ற தமிழர்களைச் சிங்களவர்கள் தடுத்தார்கள். பின் நான் தலையிட்டு வீமன்கல்லுக்குத் தமிழர்களை எவ்வித கஷ்டமுமில்லாமல் தங்கள் சாமான்களை எடுத்துவர ஏற்பாடு செய்தேன்.

"கூட்டணித் தலைவர்களின் உணர்ச்சிப் பேச்சுகள்தான் கலவரத்திற்கு முக்கிய காரணமாகும். வவனியாவில் சிங்களருக்கள் பாகுபாடாக நடத்தப்பட்டது மற்றொரு காரணமாகும்.

சட்டத்தரணி பாரிலட் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்டத்தரணி பாரிலட்: சிங்கள மக்களுக்குப் பாகுபாடு காட்டப்பட்டது பற்றிக் கூறினீர்?-ஆம்.

சட்: நீர் வவனியா அரசாங்க அதிபர் நடத்தை பற்றி மேலிடத்திற்கு ஏன் புகார் செய்யவில்லை?-நான் புகார் செய்யவில்லை.

சட்: இதுவரை உமது நிர்வாகக் கஷ்டங்களை யாருக்கும் எழுத்தில் அறிவித்தீரா?-நான் ஜி. ஏ.க்கு அறிவித்தேன்.

சட்: பிரதிகள் உண்டா?-சில உண்டு. சுப்பிரமணியம் மரம் ஏற்றியது பற்றி எழுதினேன். இதுதான் அந்தப் பிரதி. (சமர்ப்பித்தார்)

சட்: உமது நிர்வாகக் கஷ்டங்கள் பற்றிப் புகார்செய்தீரா?-ஆம். பிரதிகள் என்னிடம் இல்லை.

சட்: அரசாங்க அதிபருக்குப் புகார்செய்தீரா?-ஆம்.

சட்: மேலிடத்திற்கு அறிவிக்கவில்லை?-இல்லை.

சட் பாரிலட்: இது பற்றி ஜி. ஏ.யின் 'பைலை' பார்வையிடவேண்டும். அதில் உண்மைப் பிரதி இருக்குமென்பதைத் தெரிவிக்கிறேன்.

சட்: நீர் மேலிடத்திற்கு ஜி. ஏ. பற்றிப் புகார்செய்யவில்லை?- இல்லை.

சட்: இக்கமிஷன் முன் தான் அதைக் கூறுகிறீர்?-ஆம்

சட்: கமிஷனர் இங்கே, மேலதிகாரிகள் போல் நிர்வாகச்சீர்கேடு பற்றி நடவடிக்கை எடுக்கவில்லை?-அது தெரியும்.

சட்: ஏன் மேலிடத்திற்கு எழுதவில்லை?-6 மாதத்திற்கு மட்டுமே கஷ்டம் இருந்தது. அதன் பின் இல்லை.

சட்: வவனியாத் தொகுதி சனத்தொகை என்ன?-54,000

சட்: தமிழ்மக்கள்?-34,000

சட்: சிங்களவர்கள்?14,000

சட்: மற்றவர்கள் பிற இனத்தவர்?-ஆம்

சட்: நாடு முழுவதும் கலவரம் ஏற்படக் கூட்டணித் தலைவர்களின் பேச்சுத்தான் காரணம் என்கிறீர்?-கலவரம் ஏன் நாடு முழுவதும் ஏற்பட்டதென்பது பற்றி எனக்குத் தெரியாது.

சட்: வவனியாவில் நடந்த தமிழ்க் கூட்டணிப் பேச்சுத்தான் காரணமா?-வேறு காரணமில்லை.

சட்: மங்கையர்க்கரசி, சிங்களவர் இரத்தத்தில் நீச்சலடிக்கவேண்டுமெனக் கூட்டத்தில் பேசியது தெரியுமா?-கேள்விப்பட்டிருக்கிறேன்.

சட்: நாடுமுழுவதும் தேர்தல் கூட்டங்கள், பொலிஸாரால் ஒவ்வொரு கூட்டம் பேச்சும் குறிப்பு எடுக்கப்படுவதுண்டு?ஆம்.

சட்: கூட்டணிக் கூட்ட உரைகளை எந்தச் சிங்கள, தமிழ், ஆங்கிலப் பேப்பர்களில் படித்தீர்?சில சிங்களப் பத்திரிகைகளில், இதுபோன்ற பேச்சுக்களைப் பார்த்திருக்கிறேன்.

சட்: 77 ஜூன் 3ந் தேதி தந்தை செல்வாவின் நினைவு தினக் கூட்டம் நடந்தது. அதில் சகல மதக் குருக்களும் கலந்துகொண்டனர்?எனக்குத் தெரியாது.

சட்; பத்திரிகைகளில் என்ன வந்தது?தமிழ்நாடு அமைப்பது பற்றி இருந்தது.

சட்: தமிழரின் தமிழ்நாடு கோரிக்கை இரகசியமானதல்ல, அரசாங்கத்திற்குத் தெரியும். உலகிற்குத் தெரியும் சிங்களவர் தோலில் செருப்புத் தைத்துப் போடாமல் நித்திரை வராது என மங்கையர்க்கரசி கூறியதாகப் பத்திரிகைகளில் வந்ததா? இல்லை.

# மில்லை உடைத்து

## கொள்ளையடித்தனர்

(அனுராதபுரம்)

அனுராதபுரம் பழைய நகரத்தில் மில் ஒன்றில் வேலை செய்து வந்தேன். முருகேசு கனகலிங்கம் என்பவருக்கு அது சொந்தம். ஆகஸ்ட் 17ம் திகதி கலவரம் ஆரம்பமானபோது அங்கிருந்தேன். இரவு எட்டு மணிக்கு ஒருவர் வந்து வேறு மில்களில் கொள்ளையடிக்கப்பட்டதாகக் கூறினார். சிறிது நேரத்தில் சுமார் 25 பேர் வந்தனர்.

"அரிசி எடுடா" என்று கத்தினார்கள். 25 பேரில் இரு முஸ்லிம்களும் இருந்தனர். லாச்சியைத் திறந்து 612 ரூபா பணத்தை எடுத்தனர். 45 புசல் அரிசி இருந்தது; அதை எடுத்துச் சென்றனர்.

இவ்வாறு நேற்று அனுராதபுரத்தில் சன்சோனிக்கமிஷன் விசாரணையில் சாட்சியமளித்த தியாகராஜா கனகலிங்கம் என்பவர் கூறினார்.

அவர் தொடர்ந்து தமது சாட்சியத்தில், அன்றைய தினம் இரவு 11 மணிக்கு இன்னொரு கோஷ்டி வந்தது. அதில் பல சிங்களவர்களும் சில முஸ்லிம்களும் இருந்தனர். அருகில் கண்டீன் வைத்திருப்பவரான காதர் என்பவர் அழைத்துச் சென்று மறைத்து வைத்திருந்தார். நான் அங்கிருந்து மில்லைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மில்லை உடைத்து சாமான்களை எடுத்துச் சென்றனர். நான் அங்கே இருப்பது பாதுகாப்பில்லையென்றும் காட்டுக்குப் போய் விடும்படியும் காதர் கூறினார். அதன்பேரில் நான் காட்டுக்குள் சென்று ஒளித்திருந்தேன். அங்கிருந்து அகதிமுகாமுக்குச் சென்றேன். நேற்றுத்தான் மீண்டும் இங்கு வந்தேன்.

## தொழிற் சங்கங்கள் இணைந்தன

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையைச் சேர்ந்த பல தொழிற்சங்கங்கள் இத்தொழிற்சாலையைச் சேர்ந்த பெரிய தொழிற்சங்கமான சீமெந்துத் தொழிலாளர் யூனியனுடன் ஒன்றிணைந்துள்ளன.

10 க்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இயங்கிவந்த மேற்படி தொழிற்சாலையில் ஐ. தே. கட்சி சார்பு தொழிற்சங்கம் தவிர்ந்த ஏனைய தொழிற்சங்கங்கள் யாவும் தொழிற்சாலை ஆரம்பகாலத்திலிருந்தே இயங்கி தொழிலாளர் உரிமைகளுக்காகப் போராடிவரும் பெரிய தொழிற் சங்கமான சீமெந்து பொதுத் தொழிலாளர் யூனியனுடன் ஒன்றிணைந்துள்ளன.

தொழிற்சங்கங்கள் பல இருப்பதால் தொழிலாளர்களது பிரச்சினைகளை வென்றெடுப்பதில் கஷ்டங்கள் ஏற்படுவதால் ஒரே குரலில் தொழிலாளர்களது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக இந்த தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

(உ)

# "வர்க்க ரீதியான போராட்டத்திற்கு மேதினம் வழிவகுக்கும்"

(வண்ணார்பண்ணை)

"இன்றைய அரசு மக்களுக்கு வழங்கிய சகல வாக்குறுதிகளையும் நிறைவேற்றும் பின்போட்டு தொழிலாளர், ஆசிரியர், மாணவர் இயக்கங்களைத் தலை தூக்கவிடாமல் அழித்து ஒழித்துக்கட்டும் முயற்சியில் ஈடுபட்டுவரும் இவ்வேளையிலே தான் இன்று இலங்கை ஆசிரியர் சங்கமும் மேதினத்தை இறுக்கமாகக் கொண்டாட வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. இத்தினம் தொழிலாள வர்க்கத்தின் உணர்ச்சிகளையும் எழுச்சிகளையும் மறந்திருப்பவர்களுக்கு ஒரு ஞாபகதினமாக இருக்கும்"

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. எச். என். பர்ணாந்து விடுத்துள்ள மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிப்பதாவது: "அரசாங்க பாடசாலைகளில் அடிப்படை வசதிகள் மாணவர்களுக்கு இல்லை. பல்கலைக் கழக மாணவர், ஆசிரிய பயிற்சி மாணவர் ஆகியோருக்கெதிராகப் பொதுசனத் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. வசதியற்ற பாடசாலைகளுக்குக் கட்டிட வசதியோ, தளபாடவசதியோ இல்லாதபோதும் இன்றைய அரசு தனியார் பாடசாலைகளுக்கு வசதிகள் செய்து கொடுத்துவருகிறது. இப்படியான பாகுபாடுகளால் தொழிலாள வர்க்கம் மேலும் பின் தள்ளப்படும் பயங்கர நிலை நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றது. இன்று வர்க்க ரீதியான ஒரு போராட்டத்துக்கு இந்த மேதினம் வழிவகுக்க முடியும்.

# கூட்டணியுடன் சேர்ந்து கொண்டாடத் தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

மே தின விழாவைத் தமிழர் விடுதலைக்கூட்டணி, செந்தமிழர் இயக்கம், மொழி வழித் தொழிற்சங்கங்களின் கூட்டணி ஆகியவற்றுடன் இணைந்து நடத்தவேண்டுமென இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க ஆட்சிமன்றம் ஏகமனதாகத் தீர்மானித்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மேதினவிழா அமைப்புக் குழுவின் வேண்டுகோளைப் பரிசிலித்த சங்கம் மேற்கண்ட தீர்மானத்தை எடுத்தது.

தமிழ்த்தொழிலாளரின் ஒற்றுமை சிதறடிக்கப்படாது தமிழினத்தின் அடிப்படை உரிமைகளை வென்றெடுக்கப் பயன்படுத்தப்படவேண்டுமென்ற கருத்தினை முன்வைத்து தமிழீழப் போராட்டத்தை அங்கீகரித்துப்பொதுச் சபை எடுத்த தீர்மானத்தை அடிப்படையாக வைத்தும் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

## கல்வியறிவூட்ட நடவடிக்கை

(வேலணை)

ஆங்கிலக் கல்வி பெறுத வயது வந்தோர்க்கு இலவச ஆங்கிலக் கல்வியறிவு ஊட்ட வேலணை கல்வி அதிகாரி திரு. பொன். கணேசன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுபற்றிய விபரங்களுக்குத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (உ)

# அதிக பஸ்கள் இன்று சேவையில் விடப்படும்

[கொழும்பு]

மேதினத்தை ஒட்டி இ. போ. ச, பஸ்களை வாடகைக்கு அமர்த்துவது நிறுத்தப்பட்டுள்ள போதிலும் மேதினக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் மக்களுக்காக அவ்வப் பகுதிகளில் அதிக பஸ்கள் சேவைக்கு விடப்படும் என்று இ. போ. ச. அறிவித்துள்ளது.

இதே வேளையில் லொறியில் ஆட்களை ஏற்றிச் செல்வதும் தடைசெய்யப்பட்டுள்ளது. [இ]

# தமிழினத்தின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்துவரும் சாதிக்கொடுமை என்னும் சமூக ஏற்றத்தாழ்வுகளை மூற்றாக அகற்றி தமிழ் மக்களை ஒருமுகப்படுத்தற்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சகல தமிழ்பேசும் மக்களையும் அவர்களின் ஸ்தாபனங்களையும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

## யாழ். எம். பி. செய்தி

உலகத் தொழிலாளர் வர்க்கம் மே தினத்தை தன் உயிர்ப்போன புனித தினமாகக் கொண்டாடி வருகின்ற நிலையில் தமிழர்விடுதலைக்கூட்டணி பரந்து கிடக்கும் தமிழ்சமூகத்தின் மட்டில் ஈழத்தில்வாழும் தமிழினத்தின் பேரில் உரிமையின் வேட்கையில் தொழிலாளரின் நலனைப் பேணிக்காக்க ஒரு பொழுதேனும் பின் நிற்கவில்லை. தமிழ் ஊழியரைப் பொறுத்த வரையில் அவர்களின் உயர்வுக்கு இடையூறாக நிற்கும் சிங்களத்தேர்ச்சியின் பிடியினை அகற்றி இந்நேரத்தில் அவர்களுக்கு வாழ்வு கொடுக்க எந்நேரத்திலும்நாம் திடசங்கற்பத்தோடு மூனைந்து நிற்கும்! அணையாத முயற்சி, அவர்களின் வாழ்வுக்காக மலரட்டும்.

## விடுதலையின் மைல்கல்

தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு வண்ணை ஆனந்தன் விடுத்த மேதினச் செய்தி வருமாறு:

தமிழ் ஈழ மண்ணில் இவ்வாண்டு மேதினம் ஒரு பெரும் திருப்பு முனையாக விடுதலையின் ஒரு மைல்கல்லாக தமிழ் தேசிய இனத்தின் இதய நாதமான தமிழ்ஈழ இலட்சியத்துக்கு களமாக அமைகின்றது.

கடந்த காலங்களில் தமிழ் தேசிய இனத்தின் உயிர் பிரச்னைகளுக்கு வாக்களிக்கும் தொழிலாள சக்தி, அவ்வரசியற் பிரச்னைக்கு நேர் எதிராக செயற்படும் கட்சிகளின் தலைமையை ஏற்ற தொழிற்சங்கங்களின் கட்டுப்பாட்டில் இருந்த விசித்திரமான போக்கை நாம் காணக் கூடியதாக இருந்தது. இனி அந்த நிலைக்கே முற்றுப் புள்ளி வைக்கப்படும் என்ற உறுதியை இம் மேதினம் பிரகடப்படுத்தும். [கா]

## கத்தோலிக்க ஆயர்கள்

ஏழைத் தொழிலாளர்கள் இன்று பலமுறைகளிலும் அடக்கி ஒடுக்கப்படுவதையும், அவர்களது உழைப்புக்குரிய ஊதியத்தைக் கொடுக்காது வஞ்சிக்க படுவதையும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என மேதினத்தையொட்டி கத்தோலிக்க ஆயர்கள் விடுத்த மேதினச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. [செ]

## நல்ல அறிகுறி

தமிழ் தொழிற்சங்கக் கூட்டணிப் பொதுச் செயலாளர் ஐ. தி. சம்பந்தன் விடுத்துள்ள செய்தி:

தமிழ் தொழிலாளர் தேசிய இன உணர்வுடன் இவ்வாண்டு மேதினத்தைக் கொண்டாடுகின்ற ஒருசூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தொழில் உரிமையோடு இன உரிமையையும் பெறவேண்டும் என்றவேணவா தமிழ் தொழிலாளர்களிடையே வலுவடைந்து வருகிறது

முற்போக்கு இயக்கங்களில் நம்பிக்கை வைத்திருந்த பல இயக்கங்கள் தமிழ்ஈழக் கோரிக்கையை ஏற்று தமிழ் தொழிலாளர்களின் மேதின விழாவில் கலந்துகொள்ள முன்வந்தது நல்ல அறிகுறியாகும்.

சிறந்த தொழில் உரிமை மொழிஉரிமை, இனவிடுதலையைபெற இம்மேதின விழா தமிழ்தொழிலாளர்களுக்குஒளி பொருந்திய விழாவாக அமையட்டும். [கா]

## கந்தரலங்கார போட்டி

[சுழிபுரம்]

வழக்கம்பரை சன சமூக நிலைய 'நிலவுக் குரல்' ஆதரவில் நடைபெற்ற கந்தரலங்காரப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம் வருமாறு:

செல்வி நி. நிமலநாயகி [சித்தன்கேணி], அ. பவளருமாரி [பண்ணாகம்], பொ. அம்பலவாணர் [வட்டுவில் வடக்கு], ந. கிரிஜா [செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பு]. சி. பானாம்பிகை [சுளபூமி காரைநகர்], வி. தேவமலர் [திருமுறைக் கழகம் வட்டுக்கோட்டை]. (இ)

## சமூகசேவைப்பகுதி நடவடிக்கை

[வேலணை]

புங்குடுதீவு மக்களின் குடிதண்ணீர் கட்டுப்பாட்டைப் போக்க சமூகசேவைப்பகுதியினர் நடவடிக்கை எடுத்ததன் பயனாக சென்ற 29ம் திகதிமுதல் டிராக்டர் மூலம் வேலணை சாட்டி என்ற இடத்திலிருந்து குடிதண்ணீர் ஏற்றி புங்குடுதீவிற்கு விநியோகித்து வருகின்றனர்.

ஏற்கனவே இந்தகுடிதண்ணீர் வழங்குவதற்கு புங்குடுதீவு கிராமசபைக்கு அரசாங்கம் கொடுத்த டிராக்டரையே தற்பொழுது பாவித்துவரும் இவர்கள் பின்னர் வேறு வாகனங்களையும் பாவித்து புங்குடுதீவின் சகல பகுதிகளுக்கும் குடிதண்ணீர் வழங்க நடவடிக்கை எடுக்கவிருக்கின்றனர் என கூறப்படுகிறது [உ]

## 'ஐக்கிய உணர்வினை வெளிப்படுத்துக

(யாழ்ப்பாணம்)

"உலக தொழிலாளர் தினமாகிய இம்மேதினத்தில், தமிழ்தேசிய இனத்தின் முக்கிய தேவையான பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்பச் சங்கற்பம் செய்வோம். சுயநிர்ணய உரிமையுள்ள தமிழ்ஈழத்தைக்காண தொழிலாளர்களான நாம் அனைவரும் ஒன்றுபட்டு உறுதிகொண்டு உழைப்போமாக"

இவ்வாறு ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. ஏ. துரைராஜசிங்கம் வெளியிட்ட மேதினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது: 'இம்மேதினத்தில். சகல சுருட்டுத் தொழிலாளர்களும், வேலைக்குச்செல்லாது. தமிழர் விடுதலைக் கூட்டணி நடாத்தும், தமிழர் மேதினத்தில் கலந்து எமது இனத்தின் விடிவுக்காக ஒன்றுபட்டோம் என்ற உணர்வினை அகிலத்துக்கு எடுத்துக் காட்டுமாறு அழைப்புவிடுக்கின்றேன்.' (கெ-அ)

## இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம்

(வண்ணார்பண்ணை)

இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம் தமது 12வது மேதின விழாவை இன்று தாவடியில் உள்ள சங்க தலைமை அலுவலகத்தில் கொண்டாடவிருக்கிறது. சங்கத் தலைவர் திரு. கி. யோ. வ. க. முதலியார் தலைமையில் நடைபெறும். கூட்டத்தில் சுருட்டுத் தொழிலாளர் பிரதிநிதிகள் உரையாற்றுவர்.

## ஐக்கிய—

[1-ம் பக்க தொடர்சி]

மாகி கே. கே. எஸ். வீதி, இவலிங்கப்புளியடிசந்தி, ஒட்டுமடசந்தி, மானிப்பாய்வீதி, வின்சர் தியேட்டர் சந்தி, கஸ்தூரியார் வீதி, வி. எஸ் எஸ். கே. சந்தி, ஆஸ்பத்திரிவீதி, கே. கே. எஸ். வீதி வழியாக முற்றவெளி மைதானத்தை வந்தடையும்.

பொதுக்கூட்டத்தில் திருவாளர்கள் சரத் முத்தெட்டுவேகம, ஜே. ஏ. கே. பெரேரா, சாந்தி ஒபயசேகரா, எஸ். நடராசா, க. நவரத்தினம், கே. செந்திவேல், இ.பானுதேவன், கு. பரராசசிங்கம், பா. சடாட்சரம், வே. பொன்னம்பலம், ஆர். எம். ரி. பி, இரத்நாயகா, வாசல குணரத்தின, எஸ். இராசநாயகம் உட்படப்பலர் உரை நிகழ்த்துவர்.

பறிக்கப்பட்ட பங்கீட்டுப் புத்தகங்களைத் திருப்பிவழங்குமாறும்-

இலங்கை நாணயத்தின் மதிப்பைக் குறைத்ததை வாபஸ் வாங்குமாறும்-

விலைவாசி உயர்வைக்கட்டுப் படுத்துமாறும்-

தொழிற்சங்க உரிமைகளில் கைவைக்க வேண்டாமென்றும்-

வெள்ளை அறிக்கையை முற்றாக வாபஸ்வாங்குமாறும்-

மாணவர்களின் நியாயமான உரிமைகளில் கை வைக்க வேண்டாமென்றும்,

ஆசிரியர்களைப் பழிவாங்கும் நடவடிக்கைகளைக் கைவிடுமாறும் சம்மேளனம் கோரிக்கை விடுக்கவுள்ளது.

சகல அணிகளையும் சேர்ந்தவர்களையும் ஊர்வலத்திலும், கூட்டத்திலும் பங்குபற்றுமாறும் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

## சுயநிர்ணய—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டையும் நாடி நிற்கும் பேரியக்கங்களுள் கம்யூனிட் இயக்கமும் அதன் முன்னணிப் படையாக திகழ்கிறது.

இலங்கைவாழ் மக்களினது சமத்துவத்தையும் இறைமையையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

இலங்கைவாழ் 35 லட்சம் மக்களுள் மலையக பாட்டாளி வர்க்கமும் ஆலைகளிலும் அலுவலகங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்களும், இலங்கையின் கரையோரங்களில் வாழ்ந்து வரும் கடற்தொழிலாளர்களும், பல லட்சம் விவசாயிகளும் அவர்கள் மத்தியிலிருந்து இன்று வளர்ச்சியுற்றிருக்கும் புத்திஜீவிகளும் சமூக சமத்துவம் நாடி போராடும் யாழ் குடாநாட்டிலுள்ள 2 லட்சம் உரிமை மறுக்கப்பட்டுள்ள மக்கள் குலங்களும் படித்து விட்டும் பலனுள்ள தொழில் தேட பல லட்சம் வாலிபர்களும் வர்க்க விடுதலை நாடி நிற்கும் சர்வதேச தொழிலாளி வர்க்க தினமான இத்தினத்தை கொண்டாட அதேசர்வதேசியதொழிலாளர் வர்க்க ஐக்கியத்தை உருவாக்க இத்தந்த மாக்ஸ்சும் லெனினும் முன்வைத்த தேசிய இனத் தீர்வை ஏற்கட்டும். சிங்கள தேசிய இனத்திலுள்ள தொழிலாள வர்க்கம் மாக்சிஸத்தை அங்கீகரித்து சுயநிர்ணய உரிமை கோஷத்தை அரசியல் சுலோகமாக இம்முறை மேதின ஊர்வலத்தில் முன்வைக்கவேண்டும்.

இதுவே தேசிய ஐக்கியத்தையும் சர்வதே பாட்டாளி வர்க்க ஒருமைப்பாட்டையும் வளர்க்க ஒரேவழி. (உ)

## ஆசிரியர் சங்க கிளை தீர்மானம்

தமிழர் கூட்டணியினர் நடத்தும் மேதினவிழாவில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கக்கோப்பாய்க்கிளை கலந்து கொள்வதென முடிவுசெய்துள்ளது.

சங்கத் தலைவர் திரு. அ. பஞ்சாட்சரம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மேதின நடவடிக்கைகள் உட்பட சங்க வளர்ச்சி நடவடிக்கை சம்பந்தமாகவும் ஆராயப்பட்டன.

## முருங்கனில்

[1-ம் பக்க தொடர்ச்சி]

கார் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் சோதனை நடத்திய கைரேகை இரசாயண நிபுணர்கள் கொழும்பிலும் தொடர்ந்து பரிசோதனை செய்வர் [இ]

## எந்தவொரு

(1ம் - பக்க தொடர்ச்சி)

விடுதலைக்கும் தாயகத்தின் பூர்த்திகுமாகத் தங்கள் பங்கைச் செலுத்தவேண்டிய காலகட்டம் நெருங்கிவிட்டது. [கா-இ]


## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் திருநாவுக்கரசு

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சட்டத்தரணியும், சமாதானநீதவானுமான சோமசுந்தரம் திருநாவுக்கரசு காலமாகிவிட்டார். இவர் கண்மணியின் அன்புக்கணவரும், சோமேஸ்வரன் (கணக்காளர்-நைஜீரியா), நிர்மலேஸ்வரி (வைத்திய கலாநிதி-அமெரிக்கா), இராமேஸ்வரன் (என்ஜினியர்-இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், லக்குமி நகுலேந்திரன் (வைத்தியகலாநிதி-அமெரிக்கா) சௌந்தரி ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி அருணாசலத்தின் அன்புச்சகோதரரும், நிர்மலன், சொற்கோ ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரது ஈமைக்கிரிகைகள் நாளை (செவ்வாய்க்கிழமை) காலை 8 மணிக்கு ஆனைக்கோட்டையில் நடைபெறும்.

"திருவடிநீழல்",
ஆனைக்கோட்டை.

9197



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மேமாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram : 'Eenaadu' Telephone 389. Registered as a Newspaper in SriLanka.